Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

(#/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 02 (21.07.2004) புதன்கிழமை இதழ் :292

## நாடாளுமன்றத்தில்

## கஜேந்திரனின் உரையின்போது ஆளும்கட்சி கூச்சல், குழப்பம்!

(கொழும்பு)


நாடாளுமன்றத்தின் நேற்றைய கூட்டத் தொடரில தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உரை நிகழ்த்தியபோது,

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை மையத்துக்கு வந்து கூச்சலிட்டு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அதிதீவிர சிகிச்சை பிரிவு கிளிநொச்சியில் திறப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் புதிய கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.45 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரினை டொக்டர் தேவராஜ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ சுகாதாரப் பொறுப்பாளர் அருண் ஏற்றிவைத்தார்.

மருத்துவமனைக் கட்டடத்துக்கான பெயர்ப்பலகையையும், புதிய கட்டடத தொகுதியையும் ஜப்பானிய பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த கலாநிதி யுகி தியாகராசா திறந்துவைத்தார். பின்பு டொக்டர் குமாரவேற்பிள்ளை, டொகடர் ரட்நாயக்கா, டொக்டர் ஜெகநாதன், இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# சமாதானப் பேச்சுக்களில் இந்தியா கட்டாயம் முக்கிய பங்காற்றவேண்டும்!

## அம்பாறை - மத்திய முகாமில்

## விகாரை மீது குண்டு வீச்சு; இரண்டு பெண்கள் மரணம்!

(அம்பாறை)

அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தில் உள்ள பதியத்தலாவ பௌத்த விகாரை மீது நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பெண்கள் உயிரிழந்தனர்.

அத்துடன், விகாரையின் பௌத்த பிக்கு உட்பட நான்கு பேர் காயமடைந்து அம்பாறை பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

குறிப்பிட்ட விகாரையில் நேற்று முன்தினம் இரவு விசேட மத நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இந்தக் கைக்குண்டுத் தாக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய பத்திரிகைக்கு மகிந்த ராஜபக்ஷ பேட்டி

(புதுடெல்கி)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் இந்தியா கட்டாயம் முக்கிய பங்கு வகிக்கவேண்டும் என்றும் இதையே தமது அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்திய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.**

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு புதுடெல்கியில் வைத்து வழங்கிய பேட்டியிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானப் பேச்சுக்களில் முக்கிய பங்கு வகிப்பது இந்தியாவில் தான் தங்கியுள்ளது. சமாதான முயற்சிகளில் இந்தியா ஈடுபடுவதை விரும்புகின்றோம். இதற்கு அரசாங்கத் தரப்பினர் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள்.

ஏனெனில், உண்மையாகவே ஒவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாய்ந்தமருது துப்பாக்கிச் சூட்டில் இளம் பெண் ஒருவர் உயிரிழப்பு!

## சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான

## அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை!

## இளம் பெண் ஒருவர் உயிரிழப்பு!

கல்முனை - சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச சம்பவத்தில் 22 வயதுடைய அப்துல் மஜித் நசாயா என்ற இளம் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கல்முனை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி டபிள்யு. சி.விஜயதிலக்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பெண், வீட்டில் உறங்கிக கொண்டிருந்தவேளை முகமூடி அணிந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் வீட்டிற்குள் புகுந்து துப்பாக்கிப் பரயோகம் செய்ததில் இந்தப் பெண ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏறாவூரில் துப்பாக்கிச் சூடு; இரு இளைஞர்கள் காயம்

### நேற்றிரவு சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் நேற்று இரவு இனந்தெரியாத இளைஞர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தமிழ் இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து 16 கிலோமீற்றர் வடக்கே உள்ள ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே இந்த இருவரும் காயமடைந்தனர்.

கண்ணதாஸ், தேவராஜ் ஆகிய இளைஞர்களே காயமடைந்தவர்களாவர்.

இவர்களின் வீட்டுக்கு மோட்டார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை!

(கொழும்பு)


விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சி குறித்து, ஆளும் ஐக்கிய மக்கள சுதந்திர முன்னனி அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாட்டை வெளியிடுமாறு ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை.

இடைக்கால நிர்வாக சபை

(12 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, புதுடெல்கியில் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்து கலந்துரையாடியபோது.....

## கருணாவுக்கு உதவியது குறித்து துண்டுப்பிரசுரம் மூலம் விளக்கம்!

### அலிசாஹிர் மௌலான விநியோகிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு உதவியது குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா தனது சொந்தக் கையொப்பத்துடன் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அலிசாஹிர் மௌலானாவின் தன்னிலை விளக்கமாக அமைந்த இந்த துண்டுப் பிரசுரம், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பில் பரவலாக விநியோகிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வலய மட்டப் போட்டிக்குத் தோற்றவுள்ளனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

### பாவோதல்

முதலாம் இடம் - ஆ.றஜிதா (இமையாணன் அ.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - க.நகுலேஸ்வரி (வல்வெட்டி இ.த.க.பாடசாலை)

மூன்றாம் இடம் - கி.நிரோஜி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### இசை தனி

முதலாம் இடம் - மு.நீதா (இமையாணன் அ.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - சு.அரவிந் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

மூன்றாம் இடம் - க.திப்சன்னா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தே. ஜஸ்ரின் ஜொனிற்றா (வதிரி திருஇருதயக் கல்லூரி).

### நடனம் தனி

முதலாம் இடம் - நா.சோபிதா (ஞானசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - ப.நிதானி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - நா.சுவீதனா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ந.அபிநயா (உடுப்பிட்டி மகளிர கல்லூரி).

### பிரிவு - IV
### கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்

முதலாம் இடம் - சநிரோசனா (ஞானசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - க.ஹம்சிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - சி.சுஜீபா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). (13)

# யாழ்.மத்திய பஸ் நிலைய பகுதி விஸ்தரிப்பு குறித்து ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் அமைந்துள்ள வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் நிலையத்தை விஸ்தரிப்பது மற்றும் தனியார் சிற்றூர்திகளை நிறுத்துவதற்கான தரிப்பிடம் ஒன்றை அமைப்பது தொடர்பாக நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, நேற்று நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# சிறைச்சாலை அதிகாரியை தாக்கிய நபருக்கு பிணை!

## யாழ்.நீதிமன்றம் அனுமதி

யாழ்.சிறைச்சாலை அதிகாரியைத் தாக்கியவர் 3 ஆயிரம் ரூபா பிணையில் வீடுசெல்ல நேற்று யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்தப்பிணை அனுமதியை வழங்கினார்.

கடந்த 15 ஆம் திகதி யாழ். சிறைக்காவலர் ஒருவர் யாழ்.சிறைச்சாலை அதிகாரியைத் தாக்கியிருந்தார். இதனையடுத்து, சிறைச்சாலை அதிகாரியைத் தாக்கிய பாலேந்திரா என்பவரை யாழ்.பொலிஸார் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருந்தனர்.

நேற்றைய தினம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி குற்றஞ்சுமத்தப்பட்ட சந்தேகநபரை 3 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்தார். (ப)

### ஓய்வூதியர்களுக்கான விசேடகூட்டம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

### விசேட ஆராதனை

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இன்று பிற்பகல் 4.30 மணியளவில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளது.

### ஆடிப்பூர விழா

சாவகச்சேரி - சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் ஆடிப பூரவிழா இன்று நடைபெறவுள்ளது.(34)

# சென்னை பல்கலைக்கழகத் தலைவர் ஊடகவியலாளர்களை நாளை சந்திப்பார்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், பேராசிரியருமான முனைவர் வி.அரசு நாளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதரவுள்ளார்.

இவர் பிற்பகல் 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

முனைவர் 'தமிழ் புனை கதை உருவாக்க வரலாறும், தமிழ் அச்சு ஊடகமும்' என்னும் தலைப்பில் கருத்துரைகள் வழங்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.


# டென்மார்க் பல்கலைக்கழக பேராசிரியரின் கருத்தரங்கு இன்று யாழ்.பல்கலையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினால், இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

டென்மார்க்கில் உள்ள றோயல் விலங்கு விஞ்ஞான மற்றும் விவசாய பல்கலைக்கழகத்தில், டானியல் ஆராய்ச்சி நிலையத்தில் உணவுப் பொருளியற்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றும் கலாநிதி.த.சிறீஸ்கந்தராஜா 'பல்கலைக் கழகம் ஒன்றின் இன்றைய நிலை பற்றிய ஓர் எண்ணக்கரு' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் அதே பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞானத் துறையில் இணைப்பேராசிரியராக கடமையாற்றும் கலாநிதி திருமதி சிறீஸ்கந்தராஜா 'தாவர இனவிருத்தியில் புதிய அபிவிருத்திகளும், முன்னேற்றமும் - சில ஐரோப்பிய அனுபவங்கள்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.



இலங்கை தேசிய தொழில் சம்மேளனத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் சார்க் நாடுகளில் இலங்கையரின் தொழில் மேன்மைக்கான பளிங்கு விருதினை 'இந்தோ ஸ்டேயின்லஸ் பப்டெக்' நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இந்த விருதினை மேற்படி ஸ்தாபனங்களின் நிர்வாக இயக்குநர் ந. சிவகுமாரன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் பெற்றுக்கொள்வதைக் காண லாம்.

# மூத்த பத்திரிகையாளர் கோபுவுக்கு ஜேர்மனியில் 'ஊடகச் செல்வன்' விருது

## தமிழ் எழுத்தாளர் சங்கம் வழங்கியது



(யாழ்ப்பாணம்)

மூத்த பத்திரிகையாளரும், முன்னாள் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எஸ்.எம். கோபாலரத்தினத்துக்கு ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் 'ஊடகச் செல்வன்' என்னும் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவருக்கான இந்தக் கௌரவத்தினை நேற்று முன்தினம் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் விசேட கூட்டம் நடத்தி வழங்கினர்.

இவருக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் விருது வழங்கிக் கௌரவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக் கதாகும். (ப)



யாழ்.வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் புதிய இணையத்தளம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், பணிப்பாளர் சதுர்முகன், அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் டொக்டர் இ.அம்பலவாணர் ஆகிய இருவரும் இணையத்தளக் கணினியை இயக்கி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த

காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)

திறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், சுகன்யா நடித்த
கேப்டன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
Raneom Hearts
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
சிம்பு, ரம்யா, கருணாஸ், மனோரமா நடித்த

குத்து
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

உலக நாயகன் சிவாஜி அவர்களின்
3 ஆவது நினைவு அஞ்சலி நாள்

வாழ்க தமிழ்! வளர்க கலை!

தமிழர் பண்பாட்டைக் காத்து வளர்த்த நாயகர்கள் பலரை நம் கண்முன்னே கொண்டு வந்தவரும், தமிழர் காலாசாரத்தை சிறப்பாகக் காட்டிய கதைகளிலும், கதாபாத்திரங்களிலும் நடித்து தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்தவரும், தமிழை உச்சரிப்பதில் - பேசுவதில் எடுத்துக்காட்டாக விளங்கியவரும் ஆகிய முத்தமிழும் போற்றும் வித்தகக் கலைஞர், நடிப்புலக மேதை சிம்மக்குரல் அமைந்த சிவாஜி கணேசன் அண்ணன் அவர்களின் ஆத்மாவுக்கு எமது கண்ணீர் மல்கிய இதய அஞ்சலிகள்.
யாழ்மாவட்டத்தில் முன்னுமில்லை பின்னுமில்லை என்றவாறு மிக அதிகமான மக்கள் பார்த்து ரசித்துப் பண்பட்ட "வசந்தமாளிகை" அத்துடன் சவாலே சமாளி, உத்தமன், பைலட் பிறேம்நாத் போன்ற வெற்றிப் படங்களைத் தந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவுகள் எமது உயிர் உள்ளவரை
மறவாது-பிரியாது- நீங்காது!!!
அவர்புகழ் வாழ்க!
உலகநாயகன் வசூல் மன்னன்
யாழ்மாவட்ட சிவாஜி ரசிகர்கள் ஒன்றியம்
(சி/2773)

# கிழக்கில் புலிகள்-இராணுவம் சந்திப்பை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை!

## அரசு விடுத்தது

கடந்த ஒன்றரை மாதத்திற்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைநிறுத்தப்பட்டிருந்த கிழக்குப் பிரதேச படையினருடனான சந்திப்பை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத் சமாதான செயலகத்தின் தலைவர் ஜயந்த தனபால, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹுறாவ் ஹொவ்டேக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே இது பற்றி அறிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு கிழக்குப் பிரதேசத்தில் நடைபெற்று வந்த விசேட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசும், இராணுவமும் தயாராக இருப்பதனால், இவர்களுக்கிடையேயான சந்திப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

தற்போது தோன்றியுள்ள நிலவரங்களுக்கு அமைய மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது. (தே)



இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்-இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# ஆட்பதிவு திணைக்களத்தில் கோவைகள் சில மாயம்!

## உயரதிகாரிகளுக்கும் தொடர்பாம்

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பலியான தற்கொலைக் குண்டுதாரிக்கும், அவரை டக்ளஸின் அமைச்சு அலுவலகத்திற்கு அழைத்துச் சென்ற சத்தியலீலாவுக்கும், போலி தேசிய அடையாள அட்டைகளை வழங்கியதோடு, தொடர்புடைய கடிதக் கோவைகள் ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து காணாமற் போயுள்ளதாக இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் சிராணி அபயசேகர கொழும்பு தலைமை நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தனவுக்கு அறிவித்துள்ளார்.

பெண் புலி உறுப்பினர்களுக்குப் போலி தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதன் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்கள், மூலப்பிரதி உட்பட்ட கோவைகள் அனைத்தும் காணாமற்போயுள்ளதாகத் தெரியப்படுத்திய இரகசிய பொலிஸார் இருவருக்கும் போலி தேசிய அடையாள அட்டைகளைத் தயாரிப்பதில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் சில உயரதிகாரிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாகவும், அது தொடர்பான தகவல்கள் வெளியாகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த 14 ஆம் திகதியன்று இரகசியப் பொலிஸாரால் ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து பெறப்பட்ட 13 தேசிய அடையாள அட்டைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களின் மூலப்பிரதியையும், அவற்றோடு தொடர்புடைய ஆவணங்களையும் தம்மிடம் வழங்கும்படி ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தும், இதுவரை அவை ஒப்படைக்கப்படவில்லை எனவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (தே)

# தேர்தல் செயலக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப் பணமில்லையாம்

(கொழும்பு)

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்குச் செலவான 93 கோடி ரூபாவை திறைசேரி, இதுவரை தேர்தல் திணைக்களத்திற்கு வழங்காமையால், அங்கு பணியாற்றும் அதிகாரிகள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் இந்த மாதச் சம்பளத்தைக்கூட வழங்குவதற்கு பணம் இல்லாத அளவுக்கு கடுமையான நிதிச் சிக்கலை தேர்தல் திணைக்களம் எதிர்நோக்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க, இதற்குப் பின்னர் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின் பொருட்டு - தேர்தல் திணைக்களத்திலிருந்த அனைத்து அடிப்படை நிதி ஒதுக்கீடுகளும் செலவிடப்பட்டு விட்டதாக தேர்தல் செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் தடவை வரவு - செலவு திட்ட நிதியொதுக்கீடு மாகாணசபை தேர்தலுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தபோது அந்த நிதி திடீரென நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செலவிடப்பட்டது.

இவ்வாறு செலவிடப்பட்ட அந்த நிதியும் இதுவரை திறைசேரியால் வழங்கப்படாமையே இந்த நிதிப் பற்றாக்குறைக்குக் காரணமென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தல் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கும், மாகாண சபைகளுக்கும் உரிய கச்சேரிகளில் கடமையாற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் தேர்தல் கடமைகளின் பொருட்டு வழங்கப்படவேண்டிய சம்பளத்தை வழங்குவதற்கு முடியாமல் உள்ளது.

இது குறித்து தேர்தல் செயலகம் ஜனாதிபதி செயலகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதனையடுத்து பணம் வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கும், தேர்தல் செயலகத்திற்கும், திறைசேரிக்கும் இடையில் கடிதப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன.

தேர்தல் செயலகத்தில் பணியாற்றும் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு இந்தமாதம் சம்பளம் வழங்குவதற்கு 50 லட்சம் ரூபா தேவையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(தே)

# குண்டு தாரிக்கு உதவியதாக நால்வருக்கு விளக்க மறியல்!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் கடந்த ஆறாம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பேரை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

மருதானையைச் சேர்ந்த மொகமட் ராவ்டீன், மவுண்ட் லவனியாவைச் சேர்ந்த குலரத்தின பெர்னாண்டோ, பாணந்துறையைச் சேர்ந்த இந்திரஜித் நந்தன கருணாநாயக்கா ஆகியோரே இவ்வாறு ஆஜர்படுத்தப்பட்டனர்.

தற்கொலைக் குண்டுத்தாரிக்கு போலி அடையாள அட்டைகளை இவர்கள் தயாரித்து பெருமளவிலான பணத்திற்கு வழங்கியதாக இவர்கள்மீது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவர்கள் நால்வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# சிங்களப் பெயருடன் நடமாடிய தமிழ்ப்பெண் பொலிஸாரால் கைது!

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் சிங்களப் பெயரில் தனியார் வகுப்புக்களை நடத்தி வந்த தமிழ்ப்பெண் ஒருவரை அநுராதபுரப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரை அநுராதபுர நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தபோது, அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுர மாவட்ட நீதிபதி ஹட்சன் சமரதுங்க உத்தரவிட்டார்.

போலிப் பெயரில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் மாரிமுத்து செல்லத்துரை சரோஜா (வயது 34) என்ற பெண்மணியாவார்.

இவர் விமலதர்மசூரிய முதியன்சலாகே சகுந்தலா என்ற பெயரில் ஒரு மாதத்துக்கு முன்பே அநுராதபுரத்தில் இவர் தங்கியிருந்த வீட்டை வாடகைக்குப் பெற்றுள்ளர்.

பின்னர் இவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பித்து வந்தார். இவரது கணவரான தமிழர் குவைத்தில் தொழில் புரிவதாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

மூன்றரை வயதுக் குழந்தையொன்றுக்குத் தாயாரான இந்தப் பெண் கொழும்பு வெள்ளவத்தை போதிய வீதியில் வசித்து விட்டு மன்னாருக்குச் சென்ற இவர் பின்னர் அநுராதபுரத்திற்கு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது தந்தையர் தமிழரெனவும் தாயார் சிங்கள இனத்தைச் சேர்ந்தவரெனவும் - அவர்கள் தற்போது சிலாபத்தில் வசித்து வருவதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர் போலியான பெயரில் நடமாடுவதாக இவரது வீட்டைச் சுற்றியிருந்த அயல்வர்கள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலை அடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# மீள்குடியமர்வு பணிகளுக்கு ஜப்பானிய அரசு நிதியுதவி!

வடக்கு - கிழக்கில் போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்கள் சார்ந்த புனரமைப்புப் பணிகளுக்காக ஜப்பானிய அரசாங்கம் 2 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கையில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க நன்கொடைகளை ஒருங்கிணைக்கும் சேவா லங்கா மன்றத்தின் தலைவர் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த உதவி வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாண மீள் குடியேற்றப் பணிகளுக்கு உறுதுணையாக அமையும் என, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

# 1980 ஜூலை வேலைநிறுத்த பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் உண்ணாவிரத போராட்டம்

கடந்த 24 வருடங்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாத வேலைநிறுத்தப் பிரச்சினைக்கு தற்போதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காதுவிடின் கொழும்பில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படுமென ஜூலை வேலைநிறுத்த ஒருங்கிணைந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

1947 ஆம் ஆண்டில் பொது வேலைநிறுத்தத்தின்போது தொழில்களை இழந்த தொழிற்சங்கத் தலைவர்களுக்கு 1956 ஆம் ஆண்டில் அரச அதிகாரத்தின் மூலம் வேலைநிறுத்த காலத்து சம்பளங்களோடு தீர்வினை வழங்கிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் ஞாபகார்த்த தினமான செப்ரெம்பர் 26 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு தீர்வு வழங்காவிடின், இந்தத் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுமென அந்த அமைப்பின் காப்பாளர் அமரதிவாகர தெரிவித்தார்.

20 வருடகாலமாக நிலவிவருகின்ற இந்த மனிதத் தன்மையற்ற தண்டனைக்கெதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் வேலைநிறுத்தப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# புலிகள் கொழும்பில் உளவு பார்க்கிறார்களாம்

(கொழும்பு)

வவுனியா கோவிற்குளம் பகுதியிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவு உறுப்பினர்கள் பத்துப் பேரும் - ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்களின் போக்குவரத்துக்கள், உணவு வகைகள் பற்றி ஆராய்வதாக புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனராம்.

வவுனியா கோவிற்குளத்தைச் சேர்ந்த ரமேஸ் என்பவர் கைதுசெய்யப்பட்ட போது அவரிடமிருந்து பெறப்பட்ட இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்ட போது இது குறித்துத் தெரிய வந்ததாம். (தே)

# அம்பாறையில் மாணவன் வானில் வந்தோரால் கடத்தல்

வானொன்றில் வந்த இனந்தெரியாத இருவர், பாடசாலை மாணவன் ஒருவனைக் கடத்திய சம்பவம் நேற்றுமுன்தினம் அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தம்பிலுவில் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் கோமாரியைச் சேர்ந்த எஸ்.யுவராஜ் (வயது 14) என்ற மாணவன் நேற்றுமுன்தினம் காலை பஸ்ஸில் சென்று இறங்கிப் பாடசாலையை நோக்கி சென்றுள்ளான்.

இந்தவேளை வானொன்றில் நின்ற இருவர் இந்த மாணவனை அழைத்துக் கதைக்கும்வேளை மற்றையவர் இந்த மாணவனின் வாயில் மருந்தொன்றைத் தடவியுள்ளார்.

இதனால் அந்த மாணவன் மயக்கமடையவே இருவரும் அவனைத் தூக்கி வானுக்குள் போட்டுக்கொண்டு கல்முனை நோக்கிச் சென்றனர்.

இந்தவேளை வாகனத்தின் ரயர் காற்றுப்போகவே சாய்ந்தமருதுவில் வானை நிறுத்திவிட்ட இருவரும் ரயர்க்கடை ஒன்றுக்குச் சென்றனர். மயக்கம் தெளிந்த மாணவன், அவ் வேளை வானிலிருந்து இறங்கி தப்பியோடி, காரைதீவிலுள்ள மக்களிடம் தன்னை யாரோ கடத்திச் செல்வதாகக் கூறும்வேளை மீளவும் மயக்கமாகிவிட்டான்.

உடனேயே அப்பகுதி மக்கள் குறித்த மாணவனை கல்முனை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதன் பின் மாணவனுக்கு மயக்கம் தெளியவே அவனது விபரங்களைக் கேட்டுப் பாடசாலை அதிபருக்கு அறிவித்தனர்.

மாணவனின் தகவலின்படி - வானுக்குள் மேலும் இரண்டு அல்லது மூன்று பேர் போர்வையால் போர்த்தியபடி மயங்கியநிலையில் இருந்ததாகவும், வான் சாரதியுடன் சேர்த்து மூவர் இருந்ததாகவும் அவர்கள் கொச்சைத்தமிழில் கதைத்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# இரண்டாவது சுற்றில் இன்று இலங்கை - பாகிஸ்தான் மோதல்

(கொழும்பு)

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் 6 நாடுகள் பங்கேற்றன. 'லீக்' முடிவில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகள் இரண்டாவது சுற்றுக்கு நுழைந்தன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஹொங் கொங் ஆகியன வெளியேற்றப்பட்டன.

இரண்டாவது சுற்றில் 4 அணிகளும், ரவுண்ட் ரொபின் முறையில் மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். 2 ஆவது சுற்று இன்று தொடங்கிறது.

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறும். ஒரு ஆட்டத்தில் 'பி' பிரிவில் இரண்டாவது




இடத்தைப் பிடித்த இந்தியா - 'ஏ' பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்த பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி பகல் ஆட்டமாகக் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறுகிறது.

இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தோற்றதால் இந்திய அணி கடுமையான விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது. ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய அணியின் தோல்வி அதிர்ச்சிகரமாக இருந்தது. இந்தத் தோல்வி இறுதிச் சுற்றுக்கு நுழைவதில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இன்றைய ஆட்டத்தில் பட்டேல் நீக்கப்பட்டு லக்ஷ்மன் இடம்பெறுவார். இரண்டு போட்டியிலும் மோசமாக ஆடியதால் டெண்டுல்கர் விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கிறார். இன்றைய ஆட்டம் அவருக்கு நெருக்கடியாக இருக்கும்.

வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் மீண்டும் காயம் அடைந்துள்ளார். இதனால், இன்றைய ஆட்டத்தில் அவர் ஆடுவாரா என்று உறுதியாகத் தெரியவில்லை. அவர் ஆடாவிட்டால் நெஹ்ரா இடம்பெறுவார்.

இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் முதலிடத்தைப் பிடித்த பாகிஸ்தான் - 'பி' பிரிவில் முதலிடத்தைப் பிடித்த இலங்கை அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். இந்தப் போட்டி இன்று பிற்பகல் 2.45 மணிக்கு ஆரம்பமாகும்.

## சென். அன்ரனீஸ் கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு சக்திவேல் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுறறுப் போட்டியில் - இந்த வருடம் தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

22 கழகங்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், ஆழியவளை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் மோதின.


கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் கடைசி நிமிடத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தபடியால், தண்டனை உதைமூலம் மூலம் 4:3 என்ற கோல் கணக்கில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சிறந்த வீரனாக தாளையடி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த யோ.செல்டன் தெரிவு செய்யப்பட்டார். (17)




# பட்டேலைத் தொடக்க வீரராக களம் இறக்கியது மிகத் தவறு!

## மியாண்டட் கருத்துத் தெரிவிப்பு



பார்த்தீவ் பட்டேலை ஆரம்ப வீரராகக் களமிறக்கியது தவறான முடிவு என்று, பாகிஸ்தான் முன்னாள் கப்டனும், முன்னாள் பயிற்சியாளருமான மியாண்டட் கூறியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர் இது தொடர்பாகக் கூறியதாவது -

டெண்டுல்கர், ஷேவாக் தொடக்க ஜோடி அனுபவம் வாய்ந்தது. அப்படியிருக்கும் போது திடீரென பார்த்தீவ் பட்டேலைத் தொடக்க ஆட்டக்காரராக அனுப்பியிருப்பது தவறான முடிவாகும். இது அபத்தமானது. இந்தியாவின் தோல்விக்கு இது ஒரு காரணமாகும்.

தொடக்க ஆட்டக்காரராக ஷேவாக் சிறப்பாக ஆடி வருகிறார். அவரை 3 ஆவது வீரராகக் களமிறககத் தேவையில்லை. ராவிட் விக்கெட் கீப்பிங் பணியைச் சிறப்பாகவே செய்துவருகின்றார். இதனால், ஒருநாள் போட்டியில் அவர் தொடர்ந்து விக்கெட் கீப்பராக இருக்கவேண்டும். பார்த்தீவ் பட்டேல் அணிக்குத் தேவையில்லை.

இந்திய அணி பாகிஸ்தான் வந்தபோது இர்பான் பதான் பற்றி நான் தெரிவித்த கருத்துக்களைப் பத்திரிகைகள் திரித்துச் சர்ச்சைக்குள்ளாக்கிவிட்டன. இர்பானின் பந்து வீச்சு நன்றாக இருக்கிறது. அவர் தனது பணியைச் சிறப்பாகச் செய்துவருகின்றார் என மியாண்டட் மேலும் தெரிவித்தார்.

## யாழ். குடாநாட்டில் மேலும் பல பாடசாலைகளில் கிரிக்கெட் அறிமுகமாகிறது

சர்வதேச ரீதியாகப் பல நாடுகளில் புதிதாக கிரிக்கெட் விளையாட்டு அறிமுகமாகி வருவதுபோல, யாழ். மாவட்டத்திலும் பல பாடசாலைகளில் தோற்பந்துக் கிரிக்கெட் அறிமுகமாவது அதிகரித்துள்ளது.

இந்தவகையில், வலிகாமம் கல்வி வலயத்தில் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், இளவாலை கென்றியரசர் கல்லூரியிலும், வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் இந்த வருடம் முதல் தோற்பந்துக் கிரிக்கெட்டை அறிமுகம் செய்து வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இந்த நான்கு பாடசாலைகளிலும் ஆடுகளம் அமைக்கப்பட்டு, 12 வயதுப் பிரிவு அணிகளுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வரப்படுகின்றது.

இந்த வருடம் முதல் நடைபெறவுள்ள அஸ்ரா கிண்ண சுற்றுப்போட்டிகளிலும் இந்தப் பாடசாலைகள் பங்குபற்றுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்தப் பாடசாலை அணிகளைத் தவிர ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெற்று வரும் 14 வயதுப் பிரிவு சுற்றுப் போட்டிகளில் முதல் தடவையாக பெரியபுலம் மகாவித்தியாலயமும், கிளிநொச்சி மகாவித்தியாலயமும் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (58)




## வர்ணனையாளராக அசார் ஐ.சி.சி. கடும் எதிர்ப்பு



ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்ட அசாருதீனுக்குக் கிரிக்கெட் விளையாட்டில் எந்தவித இடமும் இல்லை என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஈஷான்மணி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அசாருதீன் வர்ணனையாளராகச் செயற்பட்டு வருகிறார். இந்தியாவைச் சேர்ந்த தொலைக்காட்சி நிறுவனம், அசாருதீனை வர்ணனையாளராக நியமித்துள்ளது. இதற்குத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்த ஈஷான்மணி, கிரிக்கெட் விளையாட்டில் அசாருதீனுக்கு எவ்வித இடமும் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வர்ணனையாளராக அசாருதீனைப் பார்ப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. "ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்ட ஒரு வீரருக்குக் கிரிக்கெட் விளையாட்டில் எந்தப் பங்கும் இல்லை.

வர்ணனையாளராக யார் செயற்படுவதென்று முடிவுசெய்ய சர்வதேச கிரிக்கெட் சபைக்கு நேரடி உரிமையில்லை. ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டவர் என்ற முறையில், குற்றம் புரிந்தவர் என்ற இந்திய கிரிக்கெட் சபையின் கூற்றின் அடிப்படையில் - எந்தவொரு வகையிலும் அவர் கிரிக்கெட் விளையாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது'' என்று ஈஷான்மணி மேலும் தெரிவித்தார்.

## ஜஸ்டின் ஹெனிஸ் தொடர்ந்தும் முதலிடத்தில்

சர்வதேச ரெனிஸ் வீராங்கனைகளின் தர வரிசைப் பட்டியலை, உலக ரெனிஸ் சங்கம் வெளியிட்டது. அதன்படி பெல்ஜிய வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் தொடர்ந்தும் முதலிடம் வகிக்கின்றார்.

கிம்கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 2 ஆவது இடத்தையும், அமெலி மவுரெஸ்மோ (பிரான்ஸ்) 3 ஆவது இடத்தையும், மிஸ்கினா (ரஷ்யா), 4 ஆவது இடத்தையும், டேவன் போர்ட் (அமெரிக்கா) 5 ஆவது இடத்தையும், எலினா (ரஷ்யா) 6 ஆவது இடத்தையும், , கேப்ரியாட்டி (அமெரிக்கா) 7 ஆவது இடத்தையும், மரியா ஷரபோவா (ரஷ்யா) 7 ஆவது இடத்தையும், சுவெட்லானா (ரஷ்யா) 8 ஆவது இடத்தையும், அஸ் சுஜியமா (ஜப்பான்) 10 ஆவது இடத்தையும் பெற்றனர்.

# இங்கிலாந்து அணியில் தொடர்ந்து கப்டனாக நீடிக்க விரும்புகிறேன்! என்கிறார் மைக்கல் வோகன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கப்டனாகத் தொடர்ந்து நீடிக்க விரும்புவதாகவும், இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கப்டனாகப் பணியாற்றுவது பெருமைக்குரிய விடயம் என்றும் மைக்கல் வோகன் கூறியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, அடுத்த வாரம் மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்த்து நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. அந்தத் தொடருக்காக இங்கிலாந்து வீரர்கள் தற்போது தீவிரமாகப் பயிற்சி எடுத்து வருகிறார்கள்.


இதனிடையே, கப்டன் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் சிறப்பாக ஆடி அதிக அளவில் ஓட்டங்களைக் குவித்துவந்த மைக்கல் வோகன், கப்டன் பதவியேற்றுக் கொண்ட பிறகு தனிப்பட்ட முறையில் சரிவரப் பிரகாசிக்கவில்லை.

எனவே, அவர் கப்டன் பதவியிலிருநது விலக விரும்புகின்றார் என்ற செய்தி இங்கிலாந்து முழுவதும் பரவியது.

அந்தச் செய்தியில் துளி கூட உண்மையில்லை என்று வோகன் மறுத்துள்ளார். "என்னுடைய தனிப்பட்ட ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். எல்லோருடைய கிரிக்கெட் வாழ்விலும் இடையே தோன்றும் ஒரு தற்காலிக பின்னடைவுதான் என் விடயத்திலும் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து நான் விரைவில் மீண்டு வருவேன்.

என்னுடைய தனிப்பட்ட ஆட்டத்தில் ஏற்பட்டுள்ள தொய்விற்காக நான் கப்டன் பதவியை இராஜினாமாச் செய்யப் போகின்றேன் என்று வந்த செய்திகள் பொய்யானவை. நான் இங்கிலாந்து அணியின் கப்டனாகத் தொடர்ந்து பணியாற்ற மிகவும் விரும்புகிறேன்.

இங்கிலாந்து நாட்டின் கிரிக்கெட் அணிக்கு கப்டனாகப் பணியாற்றுவது பெருமைக்குரிய விடயம். அதை நான் இழக்க விரும்பவில்லை'' என்று வோகன் கூறியுள்ளார்.



## இந்தியா - பாகிஸ்தான் இடையே கொல்கத்தாவில் கிரிக்கெட் போட்டி

இந்திய கிரிக்கெட் அணி, கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடியது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்தது.

இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் அணி அடுத்த ஆண்டு இந்தியா வந்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது.

இதற்கிடையே இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழா ஆண்டையொட்டி பாகிஸ்தான் அணி இந்தியா வந்து 3 ஒருநாள் போட்டியில் ஆடுமாறு டால்மியா கேட்டுக் கொண்டார். பாகிஸ்தான் அணியோ ஒரே ஒரு போட்டியில் மட்டும் விளையாடச் சம்மதித்தது.

அதன்படி இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டி நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தப் போட்டி கொல்கத்தாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரையிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா - கொலம்பியா

கோபா அமெரிக்க உதைபந்தாட்டப் போட்டி பெரு நாட்டில் நடைபெற்றுவருகிறது. இதன் ஒரு அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் ஆர்ஜென்ரீனா, கடந்த முறை சம்பியனான கொலம்பிய அணியும் மோதவுள்ளன.

இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகும். இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நாளை நடைபெறும். இதில் பிரேசில் - உருகுவே அணிகள் மோதவுள்ளன.



எல்லா அலுவலகங்களும் சனிக்கிழமைகளில் பூட்டப்படவேண்டும்.
ராஜா ஒரு அலுவலக சிற்றூழியர்.
(1) ராஜா இன்று வேலைக்குப் போகமாட்டார்.
(2) சனிக்கிழமைகளில் ராஜா வேலைக்குப் போவார்.
(3) ராஜா ஒரு அரசாங்க அலுவலகத்தின் சிற்றூழியர்.
(4) ராஜா சனிக்கிழமைகளில் அலுவலகத்திற்குச் செல்வதில்லை.

**37-38** வினாக்கள் பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
தொகுதி ஒன்றின் ஒவ்வொரு நிரையிலும் ஆங்கிலப் பெரிய எழுத்துக்களுக்குப் பதிலாக தொகுதி இரண்டின் ஒவ்வொரு நிரையிலும் ஆங்கில சிறிய எழுத்துக்கள் யாதாயினும் ஒரு குறியீட்டு முறைக்கேற்ப வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. தொகுதி இரண்டில் உள்ள சிறிய எழுத்துக்கள் தொகுதி ஒன்றில் உள்ள பெரிய எழுத்துக்களின் அதே ஒழுங்கில் தரப்படவில்லை. பெரிய எழுத்துக்களின் வகை குறிக்கும் எழுத்துக்களை விளங்கிக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.

| தொகுதி 1 | தொகுதி 2. |
|---|---|
| TLRAEI | vwxqgm |
| TNLHEG | ivqpmj |
| DNOVER | xbmyju |
| TWOGHR | upvixd |
| TVAHER | vgkpxm |

37. T ஐக் குறிக்கும் சிறிய எழுத்து யாது.
(1) v (2) w (3) m (4) p

38. L ஐ குறிக்கும் சிறிய எழுத்து யாது
(1) w (2) g (3) f (4) q

39. பின்வருவனவற்றில் தரப்பட்டுள்ள மூன்று கூற்றுக்களை தர்க்க ரீதியான தொடர்புடைமையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) நான் நேற்று சடுதியாக நோயுற்றேன். நான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டேன். நேற்று விடுமுறை.
(2) நான் நேற்று சடுதியாக நோயுற்றேன். எனது உறவினர்கள் மிகவும் கவலையுற்றனர். நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை.
(3) நான் நேற்று சடுதியாக நோயுற்றேன். நான் முடிந்தளவு இரவு வீட்டிலன்றி வெளியே சாப்பிட்டேன். அதுவே எனது நோய்க்குக் காரணமாக இருக்கலாம்.
4. நான் நேற்று சடுதியாக நோயுற்றேன். நான் நோயுற்ற முதல் சந்தர்ப்பம் இதுவன்று. நான் ஒழுங்காக மருந்து எடுத்துக்கொண்டிருந்தேன்.


40. உருவில் காட்டப்பட்டவாறு மூன்று கோடுகளைப் பயன்படுத்தி ஒரு வட்டத்தை உயர்ந்த பட்சம் 7 பிரதேசங்களாகப் பிரிக்கலாம். நான்கு கோடுகளைப் பயன்படுத்தி ஒரு வட்டம் பிரிக்கப்படத்தக்க பிரதேசங்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாது?



(1) 9 (2) 10 (3) 11 (4) 12

41 ஆம் 42 ஆம் வினாக்கள் பின்வரும் வரைபை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.

1980 இற்கும் 2000 இற்குமிடையே இலங்கையில் நான்கு நோய்களுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்படல் பற்றிய போக்குகளை இந்த வரைபு காட்டுகிறது.





41. வரைபின்படி கூடிய வேகத்தில் பரவிச் செல்லும் நோய் எது?
(1) டெங்கு (2) ஈரல் நோய்கள்
(3) மலேரியா (4) நீரிழிவு

42. பின்வரும் கூற்றுக்களில் சரியானது
(1) டெங்கு, மலேரியா அதிகரித்துச் செல்கின்றன.
(2) டெங்கு அதிகரிக்கும் அதேவேளை ஈரல் நோய் குறைகின்றது.
(3) ஈரல், நீரிழிவு நோய்கள் ஒரே சீரான அளவில் காணப்படுகின்றன.
(4) டெங்கு அதிகரிக்கும் அதேவேளை மலேரியா குறைந்து செல்கின்றது.


43. பின்வரும் தகவல்களை அவதானித்து தரப்பட்ட கூற்றுக்களுள் சரியானதைத் தெரிவு செய்க.
ஆசியாவில் இலங்கையிலே குறைந்தளவு சிசுப் பிறப்பு வீதம் உள்ளது. இலங்கையிலே குறைந்தளவு சிசு இறப்பு வீதம் உள்ளது. இலங்கையில் எழுத்தறிவு வீதம் ஆசியாவின் ஏனைய பெரும்பாலான நாடுகளின் எழுத்தறிவு வீதத்திலும் கூடியது. சார்க் நாடுகளிடையே இலங்கையிலேயே சிறந்த குடும்பத்திட்ட சேவைகள் உள்ளன. இலங்கையில் தாய் சுகாதார ஆலோசனை சேவை ஆசியாவின் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியானவை.
(1) குடும்ப திட்டத்தின் வெற்றி எழுத்தறிவு வீதத்தில் தங்கியிருக்கிறது.
(2) எழுத்தறிவு வீதம் குடும்ப திட்டத்தின் வெற்றி மீது செல்வாக்கு செலுத்தவில்லை.
(3) சார்க் நாடுகளின் சுகாதாரப் புள்ளி விபரங்களுக்கேற்ப குடும்ப திட்டமிடல் எழுத்தறிவு வீதம் செல்வாக்கு செலுத்தவில்லை.
(4) குடும்ப திட்ட முறைகள் வெற்றியீட்டுவதற்கு பிரதான காரணி எழுத்தறிவு வீதமாகும்.

44. கதவொன்றில் காட்டப்பட்டுள்ள EXIT என்ற எழுத்து கண்ணாடியில் எவ்வாறு தெறிப்படைகிறது?
(1) TIXƎ (2) EXIT (3) TIXE (4) ƎXIT


45. இந்த இரு வடிவங்களும் ஒரு குறித்த விதத்தில் ஒன்றோடொன்ற தொடர்புபட்டுள்ளன. கீழ் தரப்பட்டுள்ள வடிவங்களில் எது அதே விதத்தில் உடன் தொடர்பு பட்டுள்ளன.





46. பின்வருவனவற்றில் உரு A யிற்கும் உரு B யிற்கும் இடையே உள்ள தொடர்பை ஒத்த தொடர்பை உரு C கொண்டிருக்கும். உருவை கீழே தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.





47. பின்வரும் நான்கு உருக்களிலும் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.





48. பின்வரும் உருக்களில் அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




49. பின்வரும் மாதிரி உருவை மடித்து அமைக்கத் தக்க கனவுரு யாது?



50. பின்வரும் சதுரமுகியில் 27 திண்மச் சதுரமுகிகள் உள்ளன. இதில் நிழற்றப்பட்ட 5 சிறிய சதுரமுகிகள் அகற்றப்படும்போது புதிய திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உண்டு?




(1) 40 (2) 42 (3) 44 (4) 48

*(விடைகள் நாளை......)*

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

1 முதல் 2 வரையுள்ள வினாக்களின் அறிவுறுத்தலின்படி செயற்படவும்
1. சின்னச் சின்னப் பறவையாம்
வண்ண வண்ணப் பறவையாம்
பழுத்த பழத்தைப் பார்த்துக் கொத்தும்
பச்சை வண்ணப் பறவையாம்
இப்பாடலில் கூறப்பட்ட கூற்று ஒரு பறவை பற்றியது என்றால் பழுத்த என்ற சொல்லின் கீழும். கிளி பற்றியது என்றால் பச்சை என்ற சொல்லின் கீழும் கோடிடுக.
2. அருணன் உதித்தது அம்பும் விழித்தது
அன்பே நீ துயிலெழுந்து வாராய்
அழகாய் நாம் பள்ளி செல்வோம் வாராய்!
இப்பாடலில் கூறப்பட்ட காட்சி பாடசாலை செல்லுங்காட்சி என்றால் மூன்றாவது அடியின் கீழும். காலைக்காட்சி என்றால் முதலாவது அடியின் கீழும் கோடிடுக.

♦ இல. 03 முதல் 06 வரை சரியான விடையின் கீழ் கோடிடுக.
3. வீட்டைக் காக்கும் உயிரற்ற பொருள் - (நாய், கதவு, கல், சீமெந்து)
4. வைத்தியசாலையுள்ளே செல்லும் வழி
(தரை, தள்ளுவண்டி, நுழைவாயில், காவல்நிலையம்)
5. நோய் கண்டால் பயன்படுத்தும் பொருள்
(வைத்தியர், மருந்து, மருத்துவசாலை, மருந்து போத்தல்)
6. சூரிய வெளிச்சம் படாது வளர்க்கப்படும் செடி
(வாடும், வளரும், குறுகி வளரும், பசுமை குறையும்)

♦ இல. 07 முதல் 10 வரை மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழியாக்குங்கள்
7. இருண்டது/ கண்ணுக்கு / மருண்டவன் / பேய் / எல்லாம்
..............................................................
8. பச்சை / மாட்டுக்கு/ அக்கரை / இக்கரை
..............................................................
9. கொள்வர் / தேட்டை / தீயார் / ஈயா
..............................................................
10. நன்றே / புகினும் / பிச்சை /கற்க
..............................................................

♦ இல 11 முதல் 13 வரை பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் RA எனவும் பிழையாயின் RO பிழை எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்.
11. தனது முதுகில் வீட்டை சுமந்து செல்லும் பிராணி நத்தையாகும்.
12. செம்பு நடனம் ஒரு கிராமிய நடனமாகும் ..........................
13. பொய் இசைப் புராதன இசை வடிவமாகும் ..........................

♦ இல 14 முதல் 20 வரை பொருத்தமான விடையினை புள்ளிக்கோட்டில் எழுதுக.
14. கிருபாவின் வீட்டுத்தோட்டத்தின் 2/3 பங்கு 50 ரோஜாச் செடிகளும் அந்தூரியச் செடிகளும் எனின் மொத்த மலர்ச்செடிகள் எத்தனை?
..............................................................
15. CR நகரங்களுக்கிடையிலான தூரம் 100 கிலோ மீற்றர். இடையே L நகரம் R நகரத்திலிருந்து 37 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. L நகருக்கு C நகரிலிருந்து எவ்வளவு தூரமாகும்?
..............................................................
16. இன்னும் மூன்று ஆண்டுகளில் அம்பிகாவின் வயது அவருடைய மகளின் வயதைவிட 3 மடங்காகும். மகளின் வயது தற்போது 10. தற்போது அம்பிகாவின் வயதென்ன?
..............................................................
17. 1 லீற்றர் தண்ணீரால் 2 பாத்திரங்களை நிரப்ப முடியும். 15 பாத்திரங்கள் நிரப்ப எவ்வளவு தண்ணீர் தேவை?
..............................................................
18. பேனாவும் பென்சிலும் 5 ரூபா 75 சதம், பென்சிலின் விலையிலும் பேனா 3 ரூபா 25 சதம் கூடுதல் எனின் பென்சிலின் விலை என்ன?
..............................................................
19. ஒரு தந்தை தன் காணியின் 4/10 ஐ இரு புதல்வர்களுக்கும் 2/10 ஐ ஒரு புதல்விக்கும் பரிசாகக் கொடுத்தார். அவர் பரிசாகக் கொடுத்தது காணியின் என்ன பங்கு?
20. என்னிடம் உள்ள பணத்தில் ஒரு அப்பியாசப் புத்தகம் 10 ரூபா வீதம். 10 அப்பியாசப் புத்தகங்கள் வாங்கலாம். ஒன்று 8 ரூபாவாக அப்பியாசப் புத்தகத்தின் விலை குறையுமாயின் என்னிடம் எவ்வளவு பணம் மிகுதியாகும்?..............................

♦ இல 21 முதல் 22 வரை எண்கோலங்களைப் பூர்த்தி செய்க.
21. 7, 11, 16, 22. .................. 22. 3, 6, 4, 12, 5. ..................

♦ இல 23 முதல் 25 வரை சிங்களச் சொற்களை சிங்கள எழுத்தில் எழுதுக
23. மாமா.................. 24. புத்தகம் ..................
25. பாற்சோறு..................


♦ இல 26 முதல் 30 வரை ஆங்கிலப் பதங்களை எழுதுங்கள்
26. கிணறு.................. 27. தபாற் கந்தோர்..................
28. கோயில்.................. 29. பாடசாலை..................
30. மேசை..................

♦ இல 31 முதல் 34 வரை பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.
31. வடக்கு, தெற்கு, நிருதி மூலை, மேற்கு
32. புன்னகை, எக்காளம், வெடிச்சிரிப்பு, ஒக்காலம்
33. கீர்த்தி, புகழ், மேன்மை, இதழ்
34. சீவுளி, வாள், பேனை, அரம்

♦ இல 35 முதல் 40 வரை பின்வரும் காட்டுறிப்பேட்டை வாசித்து விடை தருக

| கொழும்பு மாநகரசபை அவசர இலக்கங்கள் | |
|---|---|
| அவசர பொலிஸ் | 071 - 333333 |
| தீயணைப்பு | 01 - 45678 |
| தேசிய வைத்தியசாலை | 071 - 51206 |
| விபத்துச்சேவை | 01 - 32567 |
| விமானநிலையம் | 01 - 72177 |

35. மயூரன் அவசரமாக 01 - 45678 இலக்கத்தை சுழற்றினால் அவர் பெற்றுக்கொள்ளும் சேவை யாது?
..............................................................
36. கனடா செல்லும் மாமாவின் பயணத்திகதியை உறுதி செய்வதற்கு சுழற்றும் இலக்கம் யாது?
..............................................................
37. பக்கத்து வீட்டில் திடீர் பயங்கரச் சண்டை ஏற்பட்டால் சுழற்ற வேண்டிய இலக்கம் யாது?
..............................................................
38. 071 - 51206 என்ற இலக்கத்தைச் சுழற்றி யாருடன் தொடர்பு கொள்ளலாம்?
..............................................................
39. வீதியில் நடந்த பயங்கர விபத்தை தெரிவிப்பதற்கு சுழற்றும் இலக்கம் யாது?
..............................................................
40. அதிகளவு சதுரமுகிகளைக் கொண்ட உருவினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.



# ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை- 2004 மாதிரி வினாத்தாள்

## உளச்சார்பு

தொகுப்பு - உபாசகர் B.Com Spl.Trd. com
விரிவுரையாளர் - மருதானை தொழில் நுட்பக் கல்லூரி

1 தொடக்கம் 3 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் ஏதாவது ஒரு காரணத்தால் ஏனைய மூன்று சொற்களுடன் பொருந்துவதில்லை. அதனைத் தெரிவு செய்க.

1. (1)அகழி (2)மார்க்கம் (3)கிடங்கு (4)கேணி
2. (1)கண் (2)மூக்கு (3)விரல் (4)செவி
3. (1)ஆணை (2)கட்டளை (3)கட்டளைச் சட்டம் (4)முயற்சி

4 ஆம் 5 ஆம் வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அட்டவணையிலுள்ள நான்கு நிரல்களிலும் உள்ள சொற்கள் நான்கிற்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டிருக்காததுடன், அந்தச் சொற்கள் ஒலியமைப்புடையன. இவற்றில் காணப்படும் வேறு விதிகளையும் அவதானித்து விடை தருக.

| | P | Q | R | S |
|---|---|---|---|---|
| A | தொண்டு | தரு | அழகு | சுதேசி |
| B | நண்டு | கரு | பழகு | விதேசி |
| C | வண்டு | திரு | குழகு | பரதேசி |

4. எவ்விரு சொற்கள் ஒத்தகருத்துடையனவாகும்.
(1)AP, BQ (2)AQ,AR (3)BQ,BR (4)BP, BQ

5. பின்வரும் எவ்விரு சொற்களை இடைமாற்றலாம்
(1)AP,BQ (2)CP,CQ (3)CR,BS (4)BS,CS

6 தொடக்கம் 8 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள மூன்று சொற்களிடையேயும் யாதாயினும் ஒரு பொது இயல்பு உண்டு. கீழே தரப்பட்டுள்ள விடைகளிலே அப்பொது இயல்பை வகைக்குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

6. ஒஸ்லோ : டப்ளின் : ஜெனிவா
(1)இவை பாழடைந்த நகரங்கள்
(2)இவை ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள நகர்கள்
(3)இவை தலை நகரங்கள்
(4)இவை பொதுநலவரசு நாடுகள்

7. மீற்றர் : சென்ரி மீற்றர் : கிலோமீற்றர்
(1)இவை அளவு கோல்கள் (2)இவை சர்வதேச அலகுகள்
(3)இவை நீளத்தை அளக்கும் அலகுகள் (4)இவை தேசிய அலகுகள்

8. குரோனர் : யென் : பாத்
(1)இவை மலைச்சிகரங்கள் (2)இவை நாணயங்கள்
(3)இவை நாட்டுப்பாடல்கள் (4)இவை பிரதேச மொழிகள்

9 ஆம் 10 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் தொடக்கத்தில் இருக்கும் சோடிச் சொற்களிடையே உள்ள தொடர்புடைமையை உள்ளசோடியை கீழே இருக்கும் சோடிகளில் இருந்து தெரிவு செய்க.

9. ஏற்றுமதி : இறக்குமதி
(1)உட்கொள்ளல் : உண்ணல் (2)குடிவரவு : குடியகல்வு
(3)படித்தல் : கற்றல் (4) கருணை : இரக்கம்

10. மரம் : பட்டை
(1)நீர் : குழாய் (2)பாதுகாப்பு : வீடு
(3)செம்மறி : கம்பளி (4)மின்சக்தி : மின்கலம்

11. ஒருவர் ஒரு வாரத்தில் தொழிற்சாலை ஒன்றில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரைக்கும் பணியாற்றுகின்றார். அவருக்கு தினமும் 30 நிமிட ஓய்வு கிடைக்கின்றது. ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளெனின் அவர் ஒருவாரத்தில் பணியாற்றும் மணித்தியால எண்ணிக்கை யாது?
(1) 50 (2) 48 (3)46 (4)45

12. 47 பிள்ளைகளைக் கொண்ட ஒரு வகுப்பில் உள்ள மாணவன் ஒருவன் 16 ஆவது இடத்தைப் பெறுகின்றான். இறுதியில் உள்ள மாணவனிலிருந்து கணிக்கப்படும்போது அவனுடைய இடம் யாது?
(1) 30 (2) 31 (3)32 (4)33

13. யாதாயினும் ஓர் எண்ணின் 1/5 ஆனது அவ்வெண்ணில் 1/7 லும் 8 இனால் கூடியது அவ்வெண் யாது?
(1) 105 (2)140 (3)175 (4)210


14 தொடக்கம் 16 வரையான வினாக்களில் அடுத்துவரும் எழுத்தை அல்லது எண்ணைத் தெரிவு செய்க.

14. ADCD : FIGH : KNML : PSRQ
(1)TWVX (2) UVWX (3)UXWV (4)UWVY


15. 4, 3 (13), 3, 4 (19), 5, 5 (......)
(1)20 (2)30 (3)25 (4)40

16. 1680, 1680, 560, 112, .......
(1)16 (2)12 (3)100 (4)10


17 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் எண்களின் கோலத்தை விளக்கி, வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

17.


(1) 68 (2)98 (3)17 (4)26

18.


(1) 50 (2) 40 (3)60 (4)45

19.



(1)20 (2)12 (3)20 (4)40

20.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 4 | 5 |
| 2 | 9 | 3 | 1 |
| 6 | 2 | 8 | |
| 9 | 1 | 2 | 3 |

(1)4 (2)8 (3)6 (4)10

21 தொடக்கம் 24 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் உருக்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வோர் உருவிலும் யாதாயினும் ஒரு தொடர்புடையமையை வகை குறிக்கப்படுமாறு மூன்று வட்டங்கள் இடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சேர்மானங்களுக்கிடையே உள்ள தொடர்புடமையை வகைக்குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.




21. ஆசிரியர்கள் : தரம் 1 ஆசிரியர்கள் : தரம் 2 ஆசிரியர்கள்
(1)B (2) C (3)D (4)E

22. தென்மாகாணம் : காலி : இரத்னபுரி
(1)B (2) C (3)D (4) E

23 ஆம் 24 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் X, Y என்னும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

X,Y ஆகிய இரண்டும் உண்மையாகவும் Y ஆனது X இன் சரியான

இங்கே மடிக்கவும்



விளக்கமாக அமைந்து இருப்பின் A யையும்
X, Y ஆகிய இரண்டும் உண்மையாகவும் Y ஆனது X இன் சரியான விளக்கமாக அமையாமல் இருப்பின் B யையும்
X உண்மையாகவும் Y உண்மையாக அமையாமலும் இருப்பின் C யையும்
X உண்மையாக அமையாமலும் Y உண்மையாகவும் இருப்பின் D யையும்
X, Y ஆகிய இரண்டும் உண்மையாக அமையாமல் இருப்பின் E யையும் தெரிவுசெய்க.

23. X : சூழல் பொலித்தீனினால் மாசுபடுத்தப்படுகின்றது
Y : இலங்கையிலே தேர்தல் காலத்தில் பொலித்தீனின் பயன்பாடு அதிகரிக்கின்றது. (1) A (2) B (3) C (4) E

24. X : இலங்கையில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது.
Y : சில சாரதிகள் சட்டங்களுக்கு மதிப்பளித்து வாகனங்களை செலுத்துவதில்லை. (1) A (2)B (3)D (4) E


25 ஆம் 26 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2 என்னும் இரு கூற்றுக்களும் ஒரு முடிவும் தரப்பட்டுள்ளன.

- முடிவை உறுதிப்படுத்துவதற்கு இரு கூற்றுக்களும் உதவுமெனின் A யையும்
- முடிவை உறுதிப்படுத்துவதற்கு இரு கூற்றுக்களும் உதவமாட்டாதெனின் B யையும்
- முடிவு நெடுங்காலத்துக்கு முன்னர் அடையப்பட்டுள்ளதாகவும் அதனை நிச்சயமாகக் கூறமுடியாது என இருப்பின் C யையும்
- இரு கூற்றுக்களுக்கும் ஏற்ப முடிவுக்கு வரமுடியாதெனின் D யையும் தெரிவு செய்க

25. கூற்று 1 : எல்லாப் பெண்களும் தாய்மார்கள் ஆவார்
கூற்று 2 : எல்லாத் தாய்மார்களும் இரக்க சுபாவமுள்ளவர்கள்
முடிவு : எல்லாப் பெண்களும் இரக்க சுபாவமுள்ளவர்கள்
(1) A (2)B (3)C (4) D

26. கூற்று 1 : மோகன் கீதாவை விரும்புகிறான்
கூற்று 2 : கீதா அழகானவள்
முடிவு : மோகன் எல்லா அழகான பெண்களையும் விரும்புகிறார்.
(1) A (2)B (3)C (4) D

27. அருகே காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை முக்கோணி உள்ளன.
(1) 18 (2) 16 (3)15 (4)20



28. பின்வரும் வினாவில் தரப்பட்டிருக்கும் நான்கு கூற்றுக்களில் மூன்று கூற்றுக்கள் எளிய சிந்தனையாக இருக்கும் அதேவேளை, மற்றைய ஒரு கூற்று முடிவாகும். அம் முடிவை தெரிவு செய்க.
(1) எனது பயணம் நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகும்.
(2) வீதியில் வாகனங்கள் அதிகமாகும்.
(3) எனது காரில் ஒரு பொறிமுறை குறைபாடும் உண்டு.
(4) மூடுபனி காரணமாக வீதி தெளிவாக இருக்கவில்லை.

29 ஆம் 30 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வாக்கியம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியும், இறுதிப் பகுதியும் முறையே 1, 6 எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேவேளை ஏனைய நான்கு பகுதிகளும் P,Q,R,S எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நான்கு பகுதிகளும் சரியான ஒழுங்கில் தரப்படவில்லை. இவற்றை சரியாக ஒழுங்குபடுத்திக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

29.
1. கணித வெளிச்சிந்தனையில்
6. எவ்வித ஐயமும் இல்லை.
P. தினசரி வாழ்வில் எதிர்நோக்கும்.
Q. ஈடுபடுவதற்கான ஆற்றல்
R. தேவையான ஆற்றல் ஆகும் என்பதில்.
S. செய்முறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு.
(1) RSQP (2)PSRQ (3)PSQR (4)QPSR

30. 1. ஆட்களிடையே பரிமாறப்படும்.
2. எளிதாக அறிமுகம் செய்யப்படும்.
P. பல்வேறு ஊடகங்களின் மூலம்.
Q. தொடர்பாடல் என்று
R. அங்கும் இங்கும் கொண்டு செல்லும் செயல் முறை
S. செய்தியை அல்லது கருத்துகளை.
(1) PRQS (2)SPRQ (3) RPWQS (4) PRSQ

31 ஆம் 32 ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை


புதிதாகக் கட்டப்பட்ட ஓர் அலுவலகக் கட்டடம் செப்பமான ஆறு தளங்களை உடையது இவை அடியிலிருந்து உச்சிக்கு 1-6 வரைக்கும் இலக்கமிடப்பட்டுள்ளன. FGIJKM என்னும் ஆறு கம்பனிகள் ஒவ்வொன்றுக்கும் அலுவலக இடவசதிக்காக ஒரு முழுத்தளத்தையும் ஆண்டு வாடகை அடிப்படையில் குறித்தொதுக்கலாம். பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப தளங்கள் குறித்தொதுக்கப்படல் வேண்டும்.
F ஆனது G யிலும் பார்க்க கீழே உள்ள ஒரு தளத்தில் இருத்தல் வேண்டும்.
I ஆனது M இன் தளத்திற்கு உடனடியாக மேலே உள்ள தளத்தில் அல்லது M இன் தளத்திற்கு உடனடியாக கீழே உள்ள தளத்தில் இருக்கக் கூடியது.
J ஆனது M இன் தளத்திற்கு உடனடியாக மேலே உள்ள தளத்திலோ M இன் தளத்திற்கு உடனடியாக கீழே உள்ள தளத்திலே இருக்கக்கூடியது.
K ஆனது தளம் 4 இல் இருத்தல் வேண்டும்.

31. கம்பனிகளுக்கு முறையே தளம் ஒன்றிலிருந்து தளம் ஆறு வரைக்கும் தளங்களை குறித்தொதுக்கும்போது பின்வரும் எம் முறையைப் பின்பற்றுதல் ஏற்றுக்கொள்ளத்தக்கது.
(1) FIGKJM (2)GIMKFJ (3)JFGKIM (4)JMIKFG

32. J ஆனது தளம் 3 இல் இருக்கும் எனின் 1 இன் மீது ஒன்று உள்ள தளங்களில் பின்வரும் எந்தக் கம்பனிச் சோடி அமைந்திருக்கும்.
(1)FG (2)FI (3)GM (4)KG

33 ஆம் 35 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப் படத்தை அடிப்படையாகக் கொண்டவை தகவல்களை அவதானித்து இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் வர வேண்டிய சரியான விடைகளைத் தெரிவுசெய்க.

ஆசிரியர் ஒருவர் தனது பாடசாலைக் கடமைகளை ஆரம்பத்தில் தொடர்பானது ஆசிரியர் பாடசாலைக்கு முற்பகல் 8.15 மணியாயின்சென்று வரவுப் பதிவேட்டில் ஒப்பமிட்ட பின்னர் பாடசாலை ஆரம்பிக்கும் நேரமாகிய 8.30 மணிவரை மாணவர்களது கடமைகளைக் கண்காணிக்கின்றார். அல்லது பத்திரிகை வாசிக்கின்றார். உரிய நேரமானதும் மாணவர்களை உடற்பயிற்சிக்குத் தயார்படுத்தி உடற்பயிற்சிகளை கண்காணிக்கிறார். பின்னர் மு.ப 8.45 மணிக்கு மாணவர்களை இறை வழிபாட்டுடன் கூடிய ஒன்று கூடலுக்குத் தயார்படுத்துகிறார். மாணவர்கள் ஒன்று கூடல் நிறைவுற்றதும் மு.ப.8.55 மணிக்கு தமது வகுப்புக்களுக்கு செல்கின்றனர். மு.ப 9.00 மணிக்கு தனது கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கிறார்.




33. (1) ஆம் (2) இல்லை
(3) பதிவேட்டில் ஒப்பமிடல் (4) பாடசாலைக்குச் செல்லல்.

34. (1) ஆம் (2) இல்லை
(3) நேரத்தை அவதானித்தல் (4) மாணவர்களை அவதானித்தல்

35. (1) ஆம் (2) இல்லை
(3) இறைவழிபாடு செய்தல் (4) வகுப்பிற்கு மாணவர் செல்லல்.

36. கீழ்த்த வினாவில் ஒரு கூற்றும் அதனைத் தொடர்ந்து அந்தக் கூற்றுத் தொடர்பான 4 விளக்கமும் தரப்படுகின்றன. எந்த விளக்கம் கூற்றின் கருத்தை உட்கிடையாகக் கொண்டுள்ளது என்பதைக் குறித்துக் விடையைத் தெரிவு செய்க.

# 2005 ஆம் ஆண்டு இடமாற்றங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு மாகாண கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதனடிப்படையில் மாவட்ட மட்டம் மற்றும் மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்களைக்கோரும் விண்ணப்பங்களை ஆசிரியர்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை, வலயத்திற்குட்பட்ட இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும், வலயங்களுக்கிடையிலான விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

இந்த இடமாற்றத் திட்டத்தின் பிரகாரம் குறித்த ஒரு வலயத்திற்குட்பட்டதாகவும், இருவெவ்வேறு வலயங்களுக்கு இடையிலும், மாவட்டங்களுக்கு இடையிலும், மாகாணங்களுக்கு இடையிலும் நான்குவகையான இடமாற்றங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் கடமையாற்றிய ஆசிரியர்களும், வசதியான இடத்தில் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கணவன் அல்லது மனைவி ஆகியோரும் இடமாற்றம் கோரத் தகுதியுடையவர்களாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 53 வயதைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கும், கர்ப்பிணி ஆசிரியர்களுக்கும் அவர்களது விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் வழங்கப்படக்கூடாது என்றும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் மேற்கொள்ளப்படுமென சுற்றுநிருபமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

யாழ்.பல்கலைக்கழக

# உடற்கல்வி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை மாணவர்கள் நேற்றுமுன்தினம்முதல் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் உரிய பதில் வழங்காமையினால், வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருவதாக விளையாட்டு விஞ்ஞானத் துறை மூன்றாம் வருட மாணவர்கள் தெரிவித்தனர்.

விளையாட்டு விஞ்ஞானத்துறை மாணவர்களின் கற்கைநெறி இரண்டு வருடங்களையே கொண்டது. இந்தக் கற்கை நெறியினை மூன்று வருடங்களாக மாற்றுமாறு விளையாட்டு விஞ்ஞானத்துறை மாணவர்கள் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தனர்.

தமது கோரிக்கைக்கு திருப்திகரமான பதில் கிடைக்கும்வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களது வகுப்புப் பகிஷ்கரிப்புப போராட்டத்தினால் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த பரீட்சைகளும் இடம்பெறவில்லை. (லெ)

# கழிவுநீர்த் தேக்கத்தால் சுகாதாரச் சீர்கேடுகள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.நாவலர் வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட யாழ்.வீதியில் தேங்கிநிற்கும் கழிவுநீரினால் இந்தப்பகுதிப் பொதுமக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவீதியில் உள்ள குடியிருப்பாளர்கள் சிலர், தமது வீட்டுக் கழிவுநீரை வீதிக்குக் குறுக்காக வாய்க்கால்களைவெட்டி எதிரேயுள்ள ரயில்வே தண்டவாளப் பாலத்திற்குள் செல்லவிடுகின்றனர்.

இதனால், இந்த வீதிக்குக் குறுக்கே சேறும், சகதியுமாகக் காணப்படுவதால் இந்தவீதியில் பயணம்செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன், கழிவுநீர் தேங்கிநிற்கும் இந்தப் பகுதியில் நுளம்பு மற்றும் தொற்றுக்கிருமிகள் பெருகிவருவதாகவும், இதனால் பல தொற்றுநோய்கள் பரவிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபையினருக்கு பல தடவைகள் முறையிட்டுள்ளபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட அருணகிரிநாதர் விழாவில் - கிருபானந்தவாரியாரின் சிஷ்யன் - டொக்டர் இரா.சிவஅன்பு பக்கவாத்தியம் சகிதம் முருகனும் அருணகிரிநாதரும் என்னும் விடயம் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

## ஆடிப்பூரத்தை முன்னிட்டு விசேட ஆராதனை

(கொக்குவில்)

ஆடிப்பூரத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்றுகாலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிமுதல் அபிஷேகமும், திருமஞ்சன நீராட்டலும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 9 மணிக்கு அம்பாளுக்கு ருது சாந்தி உற்சவமும், அதனைத்தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின்பின் அன்றைய தினம் அம்பாள் வீதியுலா இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப)

# மிதிவெடி அகற்றும் பணிகளை பார்வையிடுவதற்கு வரும் எதியோப்பிய நாட்டுக் குழு!

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் வெடிபொருள் அகற்றும் பணிகள் குறித்து அறிந்துகொள்வதற்காக, எதியோப்பிய நாட்டைச் சேர்ந்த மிதிவெடிச் செயற்பாட்டுக் குழுவொன்று நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வெடிபொருள் அகற்றும் பணிகள் குறித்து ஆராய்வதுடன், தமது நாட்டில் இடம்பெறும் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் மற்றும் நவீன முறைகள் குறித்து அறிந்துகொள்ளவுள்ளனர்.

யுனிசெவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில யாழ்வரும் இவர்கள், இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்கள் எனவும் தெரிவக்கப்படுகிறது. (ப)

# லெப்டினனட் செல்லக்கிளி அம்மானின் 21 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு

## வெள்ளியன்று நடைபெறவுள்ளது

தமிழீழ தேசியத் தலைவர் நேரடியாகப் பங்கேற்ற இராணுவத்தினருக்கு எதிரான முதலாவது பாரிய தாக்குதலான திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் வீரச்சாவடைந்த மூத்த உறுப்பினர் லெப்டினனட் செல்லக்கிளி அம்மானின் 21 ஆம் ஆண்டு நின்னவுதின நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

லெப்டினனட் செல்லக்கிளி அம்மான் நினைவுதின ஏற்பாட்டுக்குழுவினால் நடாத்தப்படும் இந்த நிகழ்வு மாலை 5 மணிக்கு நல்லூர் சங்கிலியன் மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

இராணுவத்தினருக்கு எதிராக தமிழீழத் தேசியத்தலைவர் நேரடியாகப் பங்கேற்ற இந்த வெற்றிகரத் தாக்குதல், 1983 ஆண்டு திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்திப்பகுதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வலிகாமம் வலய கணித, விஞ்ஞான போட்டிகள் பிற்போடப்பட்டன

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலய கணித விஞ்ஞான போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் போட்டிகள் அன்று ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை நடைபெறுவதால் மறுநாள் காலை 9 மணியிலிருந்து பி.ப. 2 மணிவரை முன்னர் அறிவிக்கப்பட்ட இடங்களில் தரம் 6,7,8,9,10,11 ஆகிய வகுப்புக்களுக்கு நடைபெறும்.

அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் வலய மட்ட வாய்மொழி பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என வலிகாமம் வலய கணித விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (101)

# அழகெழல் போட்டிகள் 24 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்தும் அழகெழல் கலைத்துறைசார் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து 1500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ள இப்போட்டிகளில் கிராமிய இசை, கிராமிய நடனம், சிறுவர் நாடகம் என்பன கீழ்ப்பிரிவு மாணவர்களிடையிலும், சித்திரம், தனிநடிப்பு ஆகிய போட்டிகளில் கீழப்பிரிவு, இடைநிலைப்பிரிவு, உயர்தரம் ஆகிய பிரிவுகளுக்கு இடையிலும், ஆசிரியர்களுக்கு இடையிலான ஓவியப் போட்டியும் நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி வளாகத்தில் சிறப்பாக ஆரம்பமாகி அன்றையதினம், கிராமிய இசை, நடனம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 25 ஆம் திகதி சிறுவர் நாடகம், தனிநடிப்பு, சகல பிரிவுகளுக்குமான சித்திரப் போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

# பெண் மீதான வல்லுறவு வழக்கு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு

அனலைதீவில் 2001 ஆம் ஆண்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் சார்பாக சட்டமா அதிபரினால் யாழ்.மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அனலைதீவில் வைத்து நல்லதம்பி கோவிந்தவிஜே என்பவரால் 16 வயதுடைய சின்னத்தம்பி ஜீவமலர் என்பவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்.

இதனால், அந்தப் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. இதனையடுத்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாதிக்கப்பட்ட பெண்ணினால் இந்த முறைப்பாடு தொடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றிற்கு சட்ட மா அதிபரினால் மாற்றப்பட்டுள்ளது.

இதனை நேற்று முன்தினம் விசாரணைக்கெடுத்துக்கொண்ட யாழ். மேல் நீதிமன்ற நீதியரசர் கே.பி.எஸ். வரதராஜா வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சுகவீனமேற்பட்டிருப்பதாக மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்தே வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : தே.ஐஸ்வர்யா

முகவரி : தும்பளை தெற்கு, பருத்தித்துறை.


# மந்திகை ஆதார வைத்தியசாலையில் விரைவில் அவசர சிகிச்சைப் பிரிவு!

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த அவசர சிகிச்சைப் பிரிவுக்கான தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன. இதற்கான கட்டடத் தொகுதியொன்று ஒதுக்கப்பட்டு, அதற்குத் தேவையான மின்சார வசதிகள் மற்றும் திருத்த வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளது.

கொழும்பிலிருந்து பொறியியலாளர்கள வந்து இவற்றுக்கான வேலைகளை செய்துள்ளார்கள். இந்த அவசர சிகிச்சைப் பிரிவு மிக விரைவில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை காலமும் அவசர சிகிச்சை நோயாளர்களை யாழ். போதனா வைத்தியாலைக்கு அனுப்பி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

## ஆடிப்புரத் திருவிழா

வண்ணை வடமேற்கு மனோன் மணி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்றுகாலை 10 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகளும், ருதுசாந்தி வைபவமும், மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு வசந்தமண்டப் பூசையும், திருவூஞ்சலும் நடந்தேறிப் பூந்தண்டிகையில் அம்பாள் திருவீதி எழுந்தருளுவார்.

# நன்கொடைகள் வழங்கப்படவுள்ளது

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2004 ஆம் ஆண்டுக்கான நன்கொடைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.


இதில் யாழ்.மாநகர சபை வளாகத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் இறுதியில் சனசமூக நிலையங்களுக்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட முதலாந்தர சனசமூக நிலையங்களுக்கு 1600 ரூபாவும், இரண்டாந்தர சனசமூக நிலையங்களுக்கு 1400 ரூபாவும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேலதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும், தீர்ப்பதற்கான வழிமுறைகளும்...

ஆர்.கே.மேனன்

எமது சமூகத்தில் நிர்வாகக் கட்டமைப்பு என்கின்ற ஒரு பொதுக் கட்டுக்கோப்புக்குள்தான் எந்தவொரு நிர்வாகக் கட்டமைப்பும் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.



இதற்கான காரணங்கள் வேலைகளை இலகுபடுத்தவும், அவரவர் கடமைகளைப் பிரித்து இனங்காட்டவும் என பல வகைப்படும். அந்த வகையில் எந்த ஒரு வேலைத்திட்ட உள்ளீட்டுக்கும், வெளியீட்டுக்கும் இடையில் மேலதிகாரிகளும், ஊழியர்களும் என்ற அமைப்பு நிச்சயம் இருந்தே ஆகும்.

இந்த இருவருக்கும் இடையில் பலவகைப்பட்ட காரணங்களால், முரண்பாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், இந்த முரண்பாடுகள் உடனுக்குடன் தீர்க்கப்படவேண்டும். இது இன்றியமையாத ஒன்று. இன்றைய எமது சமூகத்தில் காணப்படும் நிர்வாக குளறுபடிகள் என்கின்ற முகாமைத்துவ ஆய்வுகளை எடுத்து நோக்குகின்றபோது அது வேலைத்திட்ட அளவீட்டையே தாக்குமளவுக்கு இவ்விருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றிப் போயிருக்கின்றன.

இதனால் மக்களது அன்றாட வாழ்க்கையில் தங்கியிருக்கின்ற முக்கியமான நிர்வாகக் கட்டமைப்புக்களில் இவ்வாறான குளறுபடிகள் ஏற்படும்போது அது எமது சமூகத்தை பெருமளவு பாதிக்கின்றது என்பதையும் அனைவரும் அவதானித்திருக்க முடியும்.

அந்த வகையில் இந்த முரண்பாடுகள் பற்றி சிந்திப்பது இன்றைய தேவைகளில் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. அந்த வகையில் நாம் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கூறி அதற்கூடாக அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வோம்.

### வேலைத்திட்டத்தோடு கூடிய போதிய பயிற்சியின்மை

முதலில் எமது தொழில் பற்றிய-வேலைத்திட்டம் பற்றிய போதிய அறிவு இருக்கவேண்டும். இது இன்மையே பல முரண்பாடுகளை தோற்றுவிக்க, தீர்க்க முடியாதிருக்க முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது.

உதாரணமாக இன்று எமது நிர்வாகங்களில் முகாமைத்துவ கற்கை நெறியை முடித்த முகாமையாளர்கள் என்று பார்த்தால் அது மிகவும் குறைவாகவே உள்ளது. உதாரணமாக பாடசாலை அதிபர்களை எடுத்துக்கொண்டால் முகாமைத்துவம் என்றால் என்ன என்று கூடத் தெரியாமல் இருக்கின்றார்கள்.

வெவ்வேறு பாடப்பகுதிகளுக்கு ஊடாக வந்த அதிபர்களும் போதிய முகாமைத்துவ பயிற்சிகளை கல்வித் திணைக்களங்களும் வழங்கி பாடசாலைக்கு விடுவதாக இல்லை. இப்படியானால் முரண்பாடுகள் நிச்சயம் பரிணாமம் அடையத்தான் செய்யும்.

முகாமைத்துவம் என்பது நிர்வாகச் சட்டதிட்டங்களுக்கும், ஊழியர்களின் விட்டுக்கொடுப்புக்கும் ஊடாக நிறுவன வருவாயை அல்லது வேலைத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தி செல்வதே முகாமைத்துவம் ஆகும். இதில் ஊழியர்களது உளநிலை, வேலைப்பழு, நிர்வாக இயக்குநரின் எதிர்பார்ப்பு, திருத்தியமைக்கவேண்டிய வேலைக்கட்டமைப்பு, இலாப நோக்கம் என பல பகுதிகள் உள்ளன.

இவை பற்றி போதிய அறிவு இல்லாவிடின் முகாமை சம்பந்தமான நிதானம் இழக்க ஆரம்பிக்கும். இதனால் சிறுசிறு விடயங்களே பாரிய முரண்பாடுகளை தோற்றுவிக்கும். இதனால் இந்த முரண்பாடுகளைத் தவிர்க்க முகாமைத்துவ நிலைக்கு வந்த மேலதிகாரிகள் நிச்சயம் தமது பயிற்சியை வெளிவாரியாக வென்றாலும் முடித்து தாம் இருக்கும் பதவியைப் பற்றிய பூரண அறிவினைப் பெற்றிருக்கவேண்டும். இதன் மூலம் பெருமளவு முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ளலாம்.

### தமது நிறுவனம் அல்லது தமது தொழில் மீதுள்ள பற்றற்ற தன்மை (பொதுநோக்கம் அற்ற சுயநலம்)

எந்தவொரு செயற்பாட்டை எடுத்துக்கொண்டாலும் நாம் நமது கௌரவங்கள் எமது தனித்துவங்களோடு இணைந்தே அதைப் பார்க்கின்றோம். அது தவறு. பதவிகள் தராதரங்கள் உயர்ந்துகொண்டு போகப்போக எமது சுயநலங்களையும், எமது தனிப்பட்ட கௌரவங்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு எமது பொறுப்புக்குரிய பதவியை உணர்ந்து அர்ப்பணிப்போடு இறுதி இலக்கை நோக்கிச் செயற்படவேண்டும்.

உதாரணமாக நாம் ஒரு உயர் பதவியில் இருக்கும்போது ஊழியர்கள் எம்மை மதிக்கவேண்டும். நிர்வாகத்தின் நன்மைக்காக செய்தாலும், அது எமது உத்தரவுக்கு ஊடாகத்தான் செய்யவேண்டும்.

எமக்கு பிரச்சினை தரக்கூடிய விடயங்கள் இருப்பினும் ஊழியர்கள் தலையிடக்கூடாது. சரியாக இருப்பினும், பிழையாக இருப்பினும் நாம் சொல்வதைத்தான் செய்யவேண்டும். இப்படிப்பட்ட பலவீனப்பட்ட ஆளுமைகள் எம்மவர் மத்தியில் இருக்கின்றன. இவ்வையெல்லாம் குறுகிய வட்ட சுயநலப்போக்கே என்றுதான் கூறவேண்டும்.

இப்படிப்பட்ட உயரதிகாரிகள் தமது பதவிக்குரிய மதிப்பையும், தமது தனித்துவங்களையுமே பேண முற்படுகிறார்களே தவிர முரண்பாடுகள் அற்ற ரீதியில் நிறுவனத்தின் முற்றுப்புள்ளியை அடைய மறந்துவிடுகிறார்கள்.

இந்த அடிப்படை மனோபாவத்தால்தான் ஊழியர்களுக்கும், உயரதிகாரிகளுக்கும் இடையில் இன்று பல முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

> எமது தனிப்பட்ட நிலைப்பாடுகளை ஒருபுறம் வைத்து எம்மால் இந்த நிறுவனத்திற்கு அடையப்பட வேண்டிய இறுதிக்கட்ட இலக்கு என்ன? இந்த கதிரைக்குரிய அர்த் தம் என்ன? அதை எப்படிச் செயற்படுத்தவேண்டும் என்று சிந்தித்தோமேயானால் எமது தனிப்பட்ட சுயநலப் போக்குகளை ஒருபுறம் ஒதுக்கி நிறுவனத்தின் நன்மைக்காக முன்வந்து உழைக்கின்ற மனோநிலை தானாக உருவாகும்.

எமது தனிப்பட்ட நிலைப்பாடுகளை ஒருபுறம் வைத்து எம்மால் இந்த நிறுவனத்திற்கு அடையப்பட வேண்டிய இறுதிக்கட்ட இலக்கு என்ன? இந்த கதிரைக்குரிய அர்த்தம் என்ன? அதை எப்படிச் செயற்படுத்தவேண்டும் என்று சிந்தித்தோமேயானால் எமது தனிப்பட்ட சுயநலப் போக்குகளை ஒருபுறம் ஒதுக்கி நிறுவனத்தின் நன்மைக்காக முன்வந்து உழைக்கின்ற மனோநிலை தானாக உருவாகும்.

அவரவர் அந்தந்த நிலையில் இருந்து மாத்திரம் சிந்திப்பது

இது புரிந்துணர்வின் பிரதான ஒரு அம்சமாகும். ஒரு பொதுக் கட்டமைப்பில் எமது நிலையிலிருந்து மாத்திரம் சிந்திப்பதை முக்கியமாகத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் அதுவே பாரிய முரண்பாடுகளைத் தோற்றுவித்துவிடும்.

இது உண்மையில் நடந்த ஒரு சம்பவம். கஷ்டப் பிரதேச பாடசாலையில் ஒரு பெண் ஆசிரியை அதிகாலை 7.30 மணி பேரூந்தில் சமூகம் தந்தால் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்துக்கு செல்லலாம். ஆனால், பிரதான வீதியில் இருந்து 2 கி.மீ நடக்கவேண்டும்.

சனநடமாட்டமற்ற ராணுவ அச்சுறுத்தலுக்கு உட்பட்ட வீதி அது. காலை 8.45 மணி பேரூந்தில் சமுகம் தந்தால் பாடசாலை முன்றலில் இறங்கமுடியும். இதனால் அந்த ஆசிரியை 8.45 மணி பேரூந்தில் சென்று 9.05 மணிக்கு கையொப்பம் இட்டு வந்தார். இதனால் பாடசாலை நலனைச் சுட்டிக்காட்டி அதிபர் முரண்பட, தனது நிலையை விளங்க வைக்க ஆசிரியை முரண்பட - முரண்பாடு முற்றிவிட்டது.

இதனால் அதிபரோடு முகங்கொடுக்கமுடியாத ஆசிரியை இடமாற்றம் கோரி மாறிவிட்டார். இதனால் அன்றிலிருந்து இன்றுவரை அப்பாடசாலை மாணவர்கள் ஆங்கிலப் புத்தகம் திறந்ததே இல்லை.

இந்த நிகழ்வை சற்று சிந்தித்துப் பாருங்கள். இதற்கு அடிப்படை என்ன? இரு பக்க காரணங்களும் சரியானவை. ஆனால், முரண்பாட்டைத் தீர்க்கமுடியவில்லை. அது



ஏன்? அதிபர் அந்த ஆசிரியையினது நிலையிலிருந்து சிந்திக்காமையும், ஆசிரியை அதிபரது நிலையிலிருந்து சிந்திக்காமையுமே காரணமாகும்.

அப்படி சிந்தித்திருந்தால் பல தீர்வு முறைகளுக்கு இருவரும் சேர்ந்து முன்வந்திருக்கலாம்.

1. பாடசாலை ஆரம்ப நேரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் அல்லது பேரூந்து நடைமுறையில் இருவரும் சேர்ந்து கேட்டு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால் இங்கு அப்படி ஏதும் நடக்காமல் முரண்பாட்டால் முற்றிய விளைவு யாரைத் தாக்கியது. அப்பாவி கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வியைத்தான்.

ஆகையால், இந்த இருவருக்குமான முரண்பாடுகளை (உயரதிகாரி-ஊழியர்கள்) சாதாரணமாக எடுக்க முடியாது. ஏனெனில் அது ஒட்டுமொத்த சமூகத்தையே பாதித்துவிடும்.

அந்த வகையில் அவரவர் நிலையிலிருந்து மாத்திரம் சிந்தித்துப் பார்க்காது அடுத்தவரது நிலையிலிருந்தும் சிந்தித்துப் பார்த்தால் முரண்பாடுகளை சற்றுத் தீர்த்துக்கொள்ளலாம்.

எழுத்தில் எதையும் சொல்லலாம். செயற்படுத்தும் போதுதான் அதன் அருமை தெரியும் என சிந்திக்கிறீர்களா? 'எமக்குரிய கௌரவங்களில் இருந்தால்தான் ஊழியர்களிடத்தில் இருந்து சிலதுகளை நடைமுறைப் படுத்தமுடியும்.' என்று சிந்திக்கிறீர்களா?

ஆம், அது சரிதான். ஆனால் அந்த கௌரவங்களையும், தனித்துவங்களையும் எமது கதிரையைப் பயன்படுத்தி நாமாக தேட முற்படக் கூடாது.

எமது பதவிக்காக நாம் செய்கின்ற அர்ப்பணிப்புக்களாலும் நாம் செய்கின்ற கடமை உணர்வுகளாலும் ஊழியர்கள் மீதுள்ள பற்று, ஊழியர்கள் மீதுள்ள விட்டுக்கொடுப்பு இவைகள் மூலமாகவும் முகாமைக்குரிய தனித்துவங்களும், எமது சொல்லுக்குரிய மதிப்பும் தானாகத் தேடிவரும். இதை அனுபவத்தில் கண்டிருப்பீர்கள்.

ஊழியர்களை அச்சுறுத்தியோ அல்லது பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தியோ சிலதுகளை முகாமைத்துவத்தில் நடைமுறைப் படுத்தமுடியாது. அவ்வாறு நடைமுறைப்படுத்தினாலும் பூரண வேலைத்திட்டம் அங்கு நிறைவுபெறாது.

இதற்காக எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊழியர்களுக்கு விட்டுக் கொடுத்தல் என்பதும் முகாமைத்துவத்தில் தவறான ஒன்று. நிறுவனத்தின் நன்மைக்காக கோபப்படுதல் வேறு, சுயமதிப்பை தக்கவைப்பதற்காக கோபப்படுதல் வேறு.

நிறுவனத்தின் நன்மைக்காகக் கோபப்பட்டால் அதன் நியாயத்தை ஊழியர்களே புரிந்துகொள்வர். அந்த வகையில் சுருங்கக்கூறின் சுயமதிப்பிற்காக - பதவியையும், கதிரைகளையும் பயன்படுத்தாது பதவிகளுக்கும் கதிரைகளுக்குமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அந்த மனநிலைகளே பல முரண்பாடுகளைத் தீர்த்துவைக்கும்.

# யாழ்.பிரதேச செயலர் பிரிவில் நிவாரண அட்டைகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுரீதியாக உலருணவு நிவாரண அட்டை மீளாய்வுப் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நடைபெறுமென யாழ்.உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தமாதம் ஆரம்பமான மீளாய்வு நடவடிக்கையின் மூலம் இதுவரையில் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 70 வீதமான பகுதிகளில் மீளாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்திருப்பதாகவும், மிகுதிப்பகுதிகளில் மீளாய்வு நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீளாய்வு நடவடிக்கைமூலம் மக்களின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்குத் தீர்வுகாணப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீளாய்வின்போது பதிவுசெய்யப்படாது திருமண பந்தத்தில் இணைந்திருந்த 18 குடும்பத்தினருக்கு பதிவுத் திருமணம் செய்துவைக்கப்பட்டதுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை போன்றன பெறாமல் வாழ்ந்துவந்தவர்களுக்கு அவற்றைப் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கான ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

மீளாய்வு நடவடிக்கைமூலம் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றைக் கிராமசேவை அலுவலரினூடாகத் தீர்த்துவருவதாகவும் யாழ்.பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்*
*இன்மையும் இன்பம் தரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வெள்ளி விழாவைக் காணும் பயங்கரவாதத் தடைச்சட்டம் !?

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு கால் நூற்றாண்டு ஆகியுள்ளது .அதாவது, அந்தச் சட்டத்திற்கு இது வெள்ளிவிழா ஆண்டு. இலங்கை சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அதில் கிட்டத்தட்ட அரைவாசிப்பகுதிக்காலம் பயங்கரவாதத்தடைச் சட்டம் அமுலான நிலையிலேயே கழிந்துள்ளதென்ற செய்தியானது இந்த நாட்டின் சுதந்திரத்தின் பின்னான இறமைக்கு பெருமை சேர்க்கும் விடயமேயில்லை.

இத்தனை ஆண்டுகளுக்கு இந்தச் சட்டம் நீடித்து இன்னமும் தொடர்கின்றதென்றால், இந்த நாட்டில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் எதுவுமே, நாட்டின் முக்கியமான பிரச்சினையொன்றிற்கு தீர்வுகாணக் தவறிவிட்டன என்றோ அல்லது அந்தப் பிரச்சினையை தமது அரசியலுக்குரிய முக்கிய கருவியாக பயன்படுத்திவருகின்றன என்றேதான் அர்த்தம் கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்த நாட்டில் அமுல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டமை ஒரு தவிர்க்கமுடியாத நிகழ்வென எவரும் சொன்னால் அது அவர்களின் அரசியல் தெளிவின்மையின் வெளிப்பாடென்றே கூறமுடியும். உண்மையில் அது ஒரு அரசியல் தேவைகருதிவேண்டுமென்றே அமுல் செய்யப்பட்ட எந்தவகையிலும் இந்தநாட்டிற்கு எந்தவிதமான பயனையும் தராத ஒரு சட்டமேயாகும்.

ஒரு உண்மையான ஜனநாயக நாட்டில் மிகவும் சாதாரணமாக புரிந்துணர்வுடன், பேச்சுவார்த்தைமுலம் மனித உரிமைகளின் அடிப்படையில் தீர்க்கப்படக்கூடிய - தீர்க்கப்படவேண்டிய சிறுபான்மை மக்களின் நியாயமான அரசியல் உரிமை தொடர்பான பிரச்சினையை அவ்வாறு பேசித்தீர்க்கும் மனோ தர்மமற்ற பேரினவாத மேலாதிக்க வெறிகொண்ட தலைமைகள் சொந்த சுயநல அரசியல் இலக்குகளை மனதிற்கொண்டு, அதனை மேலும் சிக்கலாக்க முயன்ற அடி முட்டாள்தனத்தின் வெளிப்பாடே இந்தப்பயங்கரவாதத்தடைச்சட்ட மூலத்தின் தோற்றுவாயாகும்.

1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்கள சட்டஅமுலாக்கம் என்ற வாக்குறுதியை முன்வைத்து ஆட்சிபீடம் ஏறிய இன்றைய ஜனாதிபதியின் தந்தையும், மிகப்பெரும் இன வெறியர்களுள் ஒருவருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தான் இனப்பிரச்சினையை இடியப்பச் சிக்கலாக்கி அரசியல் இலாபங்களை எட்ட முயன்ற இந்த நாட்டின் மிகமோசமான அரச பயங்கரவாதியாக இந்த நாட்டின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளார்.

1958 ஆம் ஆண்டின் அரச பயங்கரவாதத்தின் வழிகாட்டலிலான முதலாவது தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் இந்த மனிதரின் தலைமையில்தான் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இதற்கு பின்புலமாக இருந்த மற்றொரு பௌத்த சிங்கள இனவாதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நடத்திய கண்டியில் இருந்து கொழும்புக்கான இனவாத வெறியை ஊட்டிய பாதயாத்திரையேயாகும். அந்த இனக்கலவரமே தமிழ்த் தேசிய உணர்வு தமிழ் மக்களுக்குள் உருவாகக் காரணமாயிற்று.

பௌத்தமத வெறியர்களையும், சிங்கள இன வெறியர்களையும் தூண்டி மிலேச்சத்தனமானதும் மனித உரிமைகளுக்கு எதிரானதுமான காடைத்தனத்தை கட்டவிழ்த்துவிட்ட முதன்மை அரச பயங்கரவாதிகள் இந்த இரு பெரும் சிங்களத் தலைவர்களும்தான்.

பின்னர் அவ்வப்போது வேண்டும் போதெல்லாம் இந்த அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்ட சிங்கள ஆட்சித் தலைமைகள் சிறுபான்மைத் தமிழ் மக்களை கொத்தடிமைகளாக வைத்திருக்க - இந்த அரசபயங்கரவாதத்தை ஒரு யுக்தியாக கைக்கொண்டனர்.

இடைக்கிடை அரச படையினரே இந்த அரசபயங்கரவாதத்தைப் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் நடைமுறைப் படுத்த நெறிப்படுத்தப்பட்டனர். அப்போதெல்லாம் பயங்கரவாத தடைச்சட்டம் எதையும், எவரும் அமுல்படுத்தியது இல்லை.


ஆனால், குட்டக் குட்ட குனிந்து நின்ற தமிழினம் உணர்வெழுச்சிகொண்டு திருப்பிக் குட்ட நிமிர்ந்து ஓர்மம் கொண்ட போது அதற்கு பயங்கரவாதம் என்று பட்டம் சூட்டிய அரசு மேற்படிச் சட்டத்தை 19.07.1979 இல் இதனை தற்காலிக ஏற்பாடாக அமுலுக்கு கொண்டுவந்தது. இந்த கொடிய சட்டத்தை, தமிழரின் விடுதலை எழுச்சியை நசுக்க என்றே கொண்டுவந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவேதான். பின்னர் அவராலேயே அது 1982 இல் நிரந்தரமாக அமுல் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழரின் உரிமைப்போராட்டத்தை, விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் பிரச்சினையாக உலகிற்குக் காட்ட இந்தச் சட்டத்தை சிங்கள இனவெறி அரசியல் தலைமைகள் பயன்படுத்திய - பயன்படுத்தி வருகின்ற விதம் காட்டுமிராண்டித் தனமானது, மனித உரிமைகளுக்கு எதிரானது.

கடந்த கால்நூற்றாண்டு கால அரச பயங்கரவாத தலைமைகள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்றழித்ததுடன், சில ஆயிரக்கணக்கானோரைக் காணமற்போகவும் வைத்துள்ளனர். இந்தப் பயங்கரவாதச் தடைச்சட்டத்தை மேலும் இறுக்கமாக்கி, அதன் விளைவுகளை உலகுக்குத் தெரியாமல் மறைக்க அவசர காலச்சட்டத்தையும் வருடக்கணக்காக பிரகடனம்செய்து, அதன் பாதுகாப்பில் ஆட்சி நடத்திய சிங்கள ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாத அணுகுமுறைகள் இன்று இலங்கையின் எதிர்காலத்தையே அதலபாதாளத்தில் விழவைத்துள்ளது.

இந்தச் சட்டம் இன்று இலங்கையின் சுதந்திரம், இறமை, பாதுகாப்பு உட்பட அனைத்தையும் சீரழியவும், சீர்குலையவும் வைத்துள்ளதுடன், அதன் பிரதான இலக்கான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எழுச்சிகொள்ள வைத்து சர்வதேச விவகாரமாகவும் மாற்றியுள்ளது.

தீர்க்கதரிசனப் பார்வையற்ற சிங்களப்பேரினவாத தலைமைகளின் மூர்க்கத்தனமான அணுகுமுறை வெளிப்பாடான பயங்கரவாத தடைச்சட்டம் இன்று அவர்களுக்கே ஆபத்தானதாகியுள்ளமை நகைப்புக்குரிய விடயமேயாகும்.

# நாடும் நடப்பும்




# சத்திய லீலாவுடன் தொடர்புடையவரிம் இரகசியப் பொலிஸார் விசாரணை

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத் தற்கொலைக் குண்டுதாரியை கொழும்புக்கு அழைத்து வந்ததாகக் கூறப்படும் சத்திய லீலாவுடன் தொடர்புடைய - வெலிமடையைச் சேர்ந்த தமிழ் இளை ஞன் ஒருவரிடம் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை நடத் திக் கொண்டிருக்கின்றனர்.

விசாரணைக்காக வெலிமடைக்குச் சென்ற இரகசியப் பொலிஸார் சத்தியலீலாவோடு கடந்த காலங்களில் பழகிய நபர்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதற்காகவே குறிப்பிட்ட இந்த இளைஞரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

சத்தியலீலாவுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் தொடர்பாகப் பல விபரங்களைத் தெரிந்துகொண்டுள்ளதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி -

சத்தியலீலாவுடன் தொடர்புடையவர்கள் பற்றித் தற்போது தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டிருக்கும் சத்தியலீலாவிடம் விசாரணை செய்த போதே பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார். (தே)

### அரசுடன் இணைவதுபற்றி

# ஒக்ரோபர் 15 ஆம் திகதிவரை கட்சி தீர்மானம் எடுக்காதாம்!

### இ.தொ.க பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொள்வதா, இல்லையா என்பது குறித்து ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை எந்தவித தீர்மானமும் எடுப்பதில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்துசமய நம்பிக்கைகளுக்கு அமைய இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 15 ஆம் திகதிவரை புதிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கோ, மங்களகரமாக நிகழ்வுகளை மேற்கொள்வதற்கோ பொருத்தமற்ற காலம் என்பதால், கட்சி சார்பான எந்தவித முடிவுகளையும் எடுப்பதை ஒக்ரோபர் 15ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் யோகராஜன் தெரிவித்தார்.

குறிப்பிட்ட இந்தக் காலப்பகுதியில் எமது கட்சி எந்தவித நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்கோ, உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவேமாட்டாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஓகஸ்ட் இரண்டு முதல் நியமனம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதன் பொருட்டு, தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் பணி முடிவடைந்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

இதன்படி, தகுதியான பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் பணி - ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களிடையே தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் சத்தியப்பிரமாணப் படிவங்களை அனுப்பும் பணி முடிவடைந்துள்ளதாகவும் நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அரச திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, பட்டதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு, அரசியல்வாதிகளின் தலையீடுகள் இன்றி அவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென நிதி அமைச்சர் சரத் அமுனுகம அமைச்சு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாருடைய வற்புறுத்தலுக்கும் கீழ்ப்படியாது, தகுதிகளின் அடிப்படையில் மாத்திரம் அவர்களை அந்த அந்தப் பிரிவுகளுக்கு அனுப்பவேண்டும் எனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் 56 ஆயிரம் பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும், அதிலிருந்து முதற் கட்டமாக 27 ஆயிரம் பேருக்கே தொழில் வாய்ப்புக்களை வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### - வெடிபொருட்கள் அகற்றப்படும் போது -

# அள்ளப்பட்ட மண் மீண்டும் அதே இடங்களில் கொட்டப்படுகிறது

வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைக்கென அள்ளப்பட்ட மண் மீண்டும் அந்தந்த இடங்களில் கொட்டப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்.நகரப்பகுதியை அண்டிய மக்கள் குடியிருப்புக்களில் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருந்த பகுதிகளிலிருந்து, வெடிபொருட்களை அகற்றும் பொருட்டு ஹலோரட் நிறுவனத்தினரால் வளவுகளிலிருந்து பெருந்தொகையான மண் அகற்றப்பட்டு அவை காக்கைதீவு வெளிப்பகுதியில் கொட்டப்பட்டு வெடிபொருள் அகற்றப்பட்டிருந்தன.

அவ்வாறு வெடிபொருள் அகற்றப்பட்ட மண் அங்கிருந்து மீண்டும் மண் அள்ளப்பட்ட பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்றன.

அவ்வாறு மண் மீண்டும் கொட்டப்படும்போது தவறவிடப்படும் வீட்டுச் சொந்தக்காரர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் அவர்களின் வீடுகளுக்கும் அள்ளப்பட்ட பின் கொட்டப்படும் எனவும் மிதிவெடிச் செயற்பாட்டலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)

# தீய செயல்களை தடுக்க ஜே. வி. பி. நடவடிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கையில் பெருகிவரும் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஜே.வி.பி. நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் தென்னிலங்கையில் பெருகிவரும் சமூக விரோதச் செயல்களில் அதிகம் ஏழைகளே பாதிப்படைவதால் அச்செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்புத் தம்மிடம் இருப்பதாக ஜே.வி.பி.யினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தாம் அமைச்சரவையில் தீர்மான மொன்றினை நிறைவேற்றப் போவதாகவும், ஜே.வி.பி. கட்சியினர் தெரிவித்திருப்பதாக சிங்களப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜூலை பதிவுகள்..... - சபேசன்

# தமிழர் மனங்களில் நிழலாடும்
# ஜூலை மாத நிகழ்வுகள்

இவ்வளவு காலமும் யூலை மாதங்களில் நிகழ்ந்த நிகழ்வுகள் பல எமது நினைவுகளில் நிழலாடுகின்றன. 1983 ஆம் ஆண்டில் இந்த யூலை மாத இறுதியில் தான் அன்றைய இலங்கை அரசு தயாரித்து வழங்கிய தமிழினப் படுகொலைகள் அரங்கேறின. 21 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற படுபாதகச் செயல்கள் மூலம் உலகநாடுகள் முன்பு இலங்கை அரசு தலைகுனிந்து நின்றது. அன்று உயிர் துறந்த, உடமை துறந்த அப்பாவித் தமிழர்களை இன்று உளம் கலங்க எண்ணிப் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல... 29ஆம் திகதி யூலை மாதத்தில் தான் பின்னாளில் வேறு ஒரு காரியமும் நடந்தேறியது. 17 ஆண்டுகளுக்கு முன்பு. அதாவது 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி அன்றுதான் இலங்கையின் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், அன்றைய இந்தியாவின் பிரதமரான ராஜீவ் காந்தியும் ஈழத் தமிழர்களின் தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் பொருட்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற ஏதோ ஒன்றில் கையெழுத்திட்டார்கள். அன்று கையெழுத்துப் போட்டவர்களின் தலையெழுத்தை விதி மாற்றி எழுதியதால் அவர்கள் இப்பொழுது நம்மிடையே இல்லை என்றாலும் அன்று அவசரத்தில் அள்ளித் தெளித்த அலங்கோலத்தின் பின்னர் ஜே. ஆர்.ஜெயவர்த்தனா கூறியது இவ்வேளையில் எமது ஞாபகத்திற்கு வருகின்றது. 'நாம் பிரபாகரனிடம் சரணாகதி அடைவதை தவிர்க்கவே இந்த ஒப்பந்தத்தை உருவாக்கினோம். பிரபாகரனின் வாளை எனது கட்சி அலுவலகத்தில் நான் தொங்க விடப் போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை' பாவம் வாளைத் தொங்க விடப்போவதாகச் சொன்னவர்தான் வாழாமல் வெகுதூரம் சென்று விட்டார். ஆனால் ஜே. ஆரும், இந்திய அமைதி காக்கும் படையும் அன்று இட்ட தீயினால் ஆயிரக்கணக்கில் இறந்துபோன அப்பாவித்தமிழ் பொது மக்களையும் கோடிக் கணக்கான பொதுச சொத்து சேதங்களையும் இந்த நேரத்தில் நினைக்கிறோம்.

தர்மத்தை சூது வந்து கௌவிய போதும் காலத்தின் தவப்பலனான தமிழர்களின் தேசியத் தலைவனால் தமிழீழம் பின்னர் விடிவெள்ளியைக் கண்டது. 17 ஆண்டுகளுக்கு பின்னர் விடிவெள்ளியை மட்டுமல்ல விடியலின் பூபாளத்தையும் தேசம் தேடி நிற்கின்றது.



அன்றிலிருந்து இன்றுவரை யூலை மாதங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பலவற்றை இப்போது நேயர்களின் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறோம்.



**1957 ஆம் ஆண்டு யூலை**

27ஆம் திகதி அன்று பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்தாகியது

**1975 ஆம்ஆண்டு யூலை**

27 ஆம் திகதி அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொலலப்பட்ட தினமாகும்.

**1977 ஆம் ஆண்டு யூலை**

21ஆம் திகதி நடைபெற்ற பொதுத தேர்தலில் தமிழீழ மக்கள் தமக்கு தமிழீழமே வேண்டும் என்று ஆணை கொடுத்தார்கள்.

அதே வருடம் அதே மாதம் சிங்கள காடையர்கள் தமிழர்களை நூற்றுக்கணக்கில் கொன்று குவித்தார்கள்.

**1979 ஆம் ஆண்டு யூலை**

20ஆம் திகதி அன்று **Prevention of Terrorism Act - PTA** என்று அழைக்கப்படுகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களை கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**1983 ஆம் ஆண்டு யூலை**

23ஆம் திகதி அன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் மரணம் அடைந்தனர்.

24ஆம் திகதி அரசின் திட்டமிடப்பட்ட தமிழினப் படுகொலைகள் ஆரம்பமாகின.

25ஆம் திகதி 35 தமிழ் கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில், சிங்களக் குண்டர்களால் கொலை செய்யப்பட்டார்கள்.

27ஆம் திகதி மேலும் 19 தமிழ் கைதிகள் அதே சிறைச்சாலையில் சிங்களக் காடை யர்களால் கொலை செய்யப்பட்டார்கள்.

**1985ஆம் ஆண்டு யூலை**

8ஆம் திகதி திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

**1987ஆம் ஆண்டு யூலை**

5ஆம் திகதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனையாக கரும்புலியாக கப்டன் மில்லர் சரித்திரம் படைத்த தினமாகும்.

17ஆம் திகதி ஜனாதிபதி ஜே.ஆர ஜெயவர்த்தனாவும் அவரது அமைச்சர்களும், இந்திய தூதுவருடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்த தினமாகும்.



19ஆம் திகதி இந்திய இராஜதந்திரிகள் தமிழீழத் தேசியத் தலைவருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திய தினமாகும்.

27ஆம் திகதி டிக்ஸிற் இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வந்து ஜெயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திய தினமாகும்.

29ஆம் திகதி இலங்கையும் இந்தியாவும் உத்தியோகபூர்வமாக, அபகீர்த்தியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தினமாகும்.

**1991ஆம் ஆண்டு யூலை**

10ஆம் திகதி வரலாற்றுச் சிறப்புமிக்க மரபு வழிப்போர் ஒன்றை ஆணையிறவில் விடுதலைப்புலிகள் ஆரம்பித்த தினமாகும்.

**1993ஆம் ஆண்டு யூலை**

25ஆம் திகதி மண்கிண்டி இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட தினமாகும்.

**1995ஆம் ஆண்டு யூலை**

9ஆம் திகதி இலங்கை விமானப்படையினால் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தமான குண்டுத் தாக்குதலால். நவாலித் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் தாயார் குழந்தைகள் முதியோர் உட்பட 141 உயிர்கள் கொடூரமாக கொல்லப்பட்ட தினமாகும். தேவாலயமும் படுசேதம் அடைந்தது.

14ஆம் திகதி யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னேறிய இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய புலிப் பாய்ச்சல் சமர் நடந்த தினமாகும்.

**1996ஆம் ஆண்டு யூலை**

18ஆம் திகதி வரலாற்றுப் புகழ் மிக்க ஓயாத அலைகள்-01 இராணுவ நடவடிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பித்த தினமாகும். இந்தச் சமரினால் முல்லைத்தீவு மாவட்டம் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டது.

**2001ஆம் ஆண்டு யூலை**

24ஆம் திகதி முழு உலகையும் பரபரப்பிலும் வியப்பிலும் ஆழ்த்தியது கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதல் நடைபெற்ற தினமாகும். அன்றைய தினம் 28 வான் கலங்கள் அழிக்கப்பட்டன.

யூலை மாதங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் மறக்க முடியாத அத்தியாயங்களாக என்றென்றும் நிலைத்து இருக்கும்.

எத்தனை வேதனைகள்? எத்தனை சோதனைகள்? எதிர்பாராத இடங்களில் இருந்ததெல்லாம் எவ்வளவோ இடர்ப்பாடுகள் தமிழீழ மக்களும் அவர்களைக் காக்கும் மறவர்களும் கடந்திட்ட நெருப்பாற்றின் கொடுமையை யார் தான் சொற்களினால் விளக்கிட இயலும்? இவர்களின் நெடுங்காலத் தியாகத்தினால் விளைந்த அறுவடைக் கால நேரமிது அல்லவா?

தமிழர்களின் வேதனைக் காலங்களின் சிகரமான கறுப்பு யூலை மறகக்கவோ மன்னிக்கவோ முடியாத சம்பவங்கள் நிறைந்த யூலை மாதங்கள்.

அந்த மாதங்களை மனதில் தாங்கும் மாந்தர்கள் நாங்கள். வரப் போகும் காலமெல்லாம் எம் நெஞ்சங்களில் அந்தத் தாக்கம் என்றும் இருக்கும். ♦

அக்கரையிலிருந்து ஒரு மதிப்பீடு பகுதி - II - சு. துரை

# தமிழ் செம்மொழி அங்கீகாரம் பெறுதல்; தொடர்பான சில எண்ணப் பதிவுகள்

இந்தியத் துணைக்கண்டத்தில் பழங்காலத்தில் வழக்கில் இருந்த பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்றவற்றுடன் தமிழும் ஒன்று. எனவே இம்மொழிகளுடன் தமிழ் மொழி கொண்டிருந்த உறவினை விளக்கும் ஆய்வுகளும் அகராதிகளும் வெளியிடப்பட வேண்டும்.

பிற்காலத்தில் தோன்றிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவை விளக்கும் ஆய்வுகளும் அகராதிகளும் வெளிவர வேண்டும். சான்றாக குணகாங்கியம் என்னும் கர்நாடகச் சந்தம் என்னும் நூல் யாப்பெருங்கலக் காரிகையில் குறிப்பிடப்படுகிறது. இன்று கன்னடத்தில் அந்நூல் இல்லை. இத்தகையதொரு நூல் இருந்ததாக இன்றைய கன்னட மொழியில் குறிப்புகள் இல்லை. மலையாள மொழியில் முதன்முதலாக 16ஆம் நூற்றாண்டு வாக்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகவத் கீதை, தமிழில் பட்டர் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட பகவத்கீதையின் நேரடி மொழி பெயர்ப்பு என்பது தெ. பொ. மீ.யின் முடிவு.

இத்தன்மைத்தான திராவிட மொழிகளின் இலக்கண இலக்கிய விடுபடல்கள் தமிழின் வழியான ஆய்வுகளால் நிறைவுபெற வாய்ப்பு உள்ளது. இந்தியக் கலைகளின் வரலாற்றில் தமிழின் பங்களிப்பு என்பது உரிய இடத்தைப் பெறவில்லை என்ற மனக்குறை தமிழர்களிடையே உள்ளது.

ஆனால் அதை நிறைவு செய்வதற்கான செயல்பாடுகள் போதுமான அளவுக்குத் தமிழில் நிகழவில்லை. மகாராஷ்டிர அரசர் 13ஆம் நூற்றாண்டில் எழுதிய இசை, நாட்டியம் தொடர்பான தன் நூலைத் திருவரங்கத்தில் உள்ள தமிழ் நாட்டியப் பெண்களுக்காக எழுதுவதாகக் கூறியுள்ளார்.

சாரங்கதாரர் குறிப்பிடும் பல இசை நுட்பங்கள் தமிழில் உள்ளதை யாவரும் அறிவர். ஆனால் இத்தகையவற்றைத் தொகுத்து முறையாக விளக்கும் கலை ஆய்வு நூல்கள் தமிழில் இல்லை.தமிழ் இலக்கியத்திலும் தமிழ்நாட்டு வரலாற்றிலும் ஆய்வுகள் நிகழ்த்திய கமில் சுவலபில், ஜார்ஜ் எல். ஹார்ட், பர்டன் ஸ்டெயின் போன்றவர்களின் அரிய ஆய்வு நூல்கள்




இன்றுவரை தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை.

அனைத்துலகப் பார்வையிலான தமிழாய்வைத் தமிழறிஞர்கள் கற்று வளப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளனர். சான்றாகப் பன்மொழிப் புலவரான கிரிகரி ஜேம்ஸ் எழுதிய சொல் பொருள் என்ற தமிழகராதிகள் பற்றிய ஆங்கில நூலில், தமிழ் மொழியில் உள்ளதுபோன்ற சொல் வளம் நானறிந்த வேறு உலக மொழிகளில் இல்லை என்கிறார் தமிழின் சிறப்பை அறிவியல் அடிப்படையில் எடுத்துக்காட்டும் இத்தகைய நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற அக்கறை, தமிழ்மொழி செம்மொழி ஆவதில் பெருமைகொள்வோருக்கு இருக்க வேண்டும்.

தமிழில் 18ஆம் நூற்றாண்டிலிருந்து வெளிவந்து தமிழ்நாட்டில் அறியப்படாத பல அரிய நூல்கள் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அபிதுபே என்ற பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியில் பதிப்பித்த 1000 பக்கங்கள் உள்ள தேம்பாவணி போன்ற பல நூல்கள் அங்கு உள்ளன. இதுபோன்ற நூல்களைத் தாய்நாட்டிற்குக் கொண்டு வந்து வெளியிடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்ச் சமூகத்திற்குத் தொன்மையான வரலாறு இருந்தும் அதற்கான ஆதாரங்களைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பு தமிழர்களிடம் மிகவும் குறைவு. இனியும் இது போன்ற உணர்வு தொடருமானால் மற்ற சமூகங்களிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மரியாதையை இழக்க நேரிடும்.

ஆவணங்கள் என்பன சொத்துப் பத்திரங்கள் போன்றவை. பத்திரம் இல்லாத சொத்திற்கு உரிமைகொண்டாடுவது பாமரத்தனமானது. எனவே எல்லாத்துறைத் தரவுகளையும் ஆவணப்படுத்தி எளிதில் ஆய்வாளர்களுக்குக் கிடைக்கும் வகைசெய்ய வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்களால் இணையத்தில் உலகம் முழுமையும் குறிப்பிடத்தக்க அளவில் தமிழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பழம் இலக்கியத்தில் ஆர்வம் உள்ள பலரும் தங்கள் விருப்பத்திற்கு உட்பட்டுத் தேர்ந்தெடுத்த இலக்கியங்களை இணையத்தில் ஏற்றி வருகின்றனர். அதற்கு அவர்கள் தங்கள் கண்ணில்படும், கைக்குக் கிடைக்கும் பிரதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

பைபிள் போன்ற நூல்களுக்கு வந்துள்ள தரப்படுத்தப்பட்ட பொதுப் பதிப்புகளைப் போலப் பழந்தமிழ் நூல்களுக்கும் அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்படும் பொதுப் பதிப்புகள் இருந்தால்தான் எதிர் வரும் காலத்தின் தலைமுறையினர் குழப்பமற்ற அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகளை மேற்கொள்ள இயலும்.

இந்நாள்வரை வெளிவந்துள்ள தமிழ் நூல் பதிப்புகளை ஒரு மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய நிலையிலும் உள்ளோம். மதுரைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரையும் விளக்கமும் என்ற நூல் தெ. பொ. மீயின் ஆசிரியரான கோ., வடிவேலுச் செட்டியாரின் விளக்க உரையோடு ஓர் ஆங்கில மொழி பெயர்ப்பையும் கொண்டுள்ளது. அதில் உள்ள மொழிபெயர்ப்பு, செட்டியாரின் நண்பரால் எழுதப்பட்டதாகச் செட்டியாரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் அந்த மொழி பெயர்ப்பு அவர்களின் மொழி பெயர்ப்பு ஆகும். ஒரு பல்கலைக்கழகமே இதுபோன்ற பிழையைச் செய்தது மட்டுமன்றி 30 ஆண்டுகளாயும் இப்பிழையைக் கண்டுகொள்ளவில்லை என்பது நம்முடைய பதிப்பு வரலாற்றின் பெருமை.

தெய்வப் புலவரால் இயற்றப்பட்டுத் தமிழனின் அடையாளமாகக் கொண்டாடப்படும் திருக்குறளுக்கே இந்தக் கதி என்றால் பிற நூல் பதிப்பு பற்றிப் பேசவும் வேண்டுமோ? அரச பாரம்பரியத்தில் வந்த ஒருவன் காலத்தின் கோலத்தால் ஆண்டியாகப் போய் விட்டான்.

இன்று அவன் அரசன்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டு ஏற்பும் வழங்கப்படுகிறது. ஆண்டிக் கோலத்துடன் அவன் அரியாசனத்தில் அமரலாமா?


□□□□

# மேற்கு வங்காளத்தில் பஸ் விபத்து நாற்பது பயணிகள் பரிதாப மரணம்!

மேற்கு வங்காளத்தில் நிகழ்ந்த பஸ் விபத்தில் 40 பேர் பலியாகினர். இதுபற்றிய விபரம் வருமாறு -

மேற்கு வங்காள மாநிலம், மால்டபா மாவட்டம், லக்ஷ்மீயூர் என்ற இடத்தில் சான்ச்சலை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று எதிர்பாராதவிதமாக பாதையைவிட்டு விலகி, அருகிலிருந்த நீர் நிறைந்த பள்ளத்தில் விழுந்து கவிழ்ந்தது.

இதில் சம்பவ இடத்திலிலேயே 37 பேர் பரிதாபமாக உடல் நசுங்கி உயிரிழ்ந்தனர். சுமார் 60 பயணிகள் அந்த பஸ்ஸில் பயணம் செய்ததாகவும், பள்ளத்துக்குள் விழுந்த பஸ் இன்னும் நீருக்குள்ளேயே அமிழ்ந்திருப்பதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்றும் மீட்பு பணியில் ஈடுபட்டுவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுவரை ரத்தக்காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய 5 பேர் மால்டாவில் உள்ள சாதர் மருத்துமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



விபத்து நடந்த இடத்தில் பஸ் கவிழ்ந்து நிற்கிறது



உயிரிழந்தவர்களின் உடல்கள் வரிசையாக அடுக்கப்பட்டுள்ளன

கடும்மழையின் காரணமாக இந்த விபத்து நேர்ந்திருக்கலாமென்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கள்ள நோட்டுக்களை கண்டறிய பயிற்சி

சீனாவில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்தப் பொருளாதார வளர்ச்சியை சீர்குலைக்கும் முயற்சியாக கள்ள நோட்டுப் புழக்கமும்



அங்கு அதிகரித்து வருகிறது. கள்ள நோட்டு கும்பலை ஒழிக்க சீன அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கள்ள நோட்டுக்களை அடையாளம் கண்டுகொள்வது எப்படி என்று பொதுமக்களுக்கு வங்கிகள் சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சாங்கி மாகாணத்தில் சியாங் நகரில் கள்ள நோட்டுக்கும் நல்ல நோட்டுக்கும் இடையேவுள்ள வித்தியாசத்தை பொது மக்களுக்கு சொல்லிக்கொடுக்கும் காட்சி. சீனா - அமெரிக்க டொலருக்கு நிகரான சீன யுவான் நாணய மதிப்பு 8.26 ஆகவுள்ளது.

## இஸ்ரேலிய தலைநகர் ரெல்- அவிவில் மாவட்ட நீதிபதி சுட்டுக்கொலை!



இஸ்ரேலின் தலைநகர் ரெல் அவிவில் வைத்து அந்த நாட்டு மாவட்ட நீதிபதி ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் அடி அசார் எனத் தெரிவிக்கப்படுகிறது. நீதிபதி தனது வீட்டிற்கருகில் காரில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் காரை நெருங்கி மூன்றுமுறை நீதிபதியின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இவரது கொலைக்கான காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனால், இது பயங்கரவாதிகளுடன் தொடர்புடையதாக நடத்தப்பட்ட தாக்குதல் என்பதனை இஸ்ரேலிய நீதியமைச்சர் ஜோசப் லபீட் மறுத்தார்.

இஸ்ரேலிய வரலாற்றிலேயே நீதிபதியொருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை இதுவே முதன்முறையெனவும் அவர் தெரிவித்தார்.

நீதிபதியின்கொலை குறித்து தான் ஆழ்ந்த அதிர்ச்சியும், கவலையும் அடைவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்தார்.

49 வயதான நீதிபதி அடி அசா இதுவரை எவ்விதமான குற்றவியல் வழங்குகளையும் விசாரிக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன ஜனாதிபதி யாசிர் அரபாத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும், பதா அமைப்பின் அல் அக்சா மார்ட்டியர்ஸ் பிரிகேட் இந்தத் தாக்குதலுக்கான உரிமையைக் கோரியுள்ளது. ஆனாலும், கடந்த காலத்திலும்பல தாக்குதல்களுக்கு இந்த அமைப்பு போலித்தனமாக உரிமை கோரியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஈராக்கின் பஸ்ரா நகரில் வைத்து முக்கிய அதிகாரி சுட்டுக்கொலை



ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில் ஈராக்கின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டதாக பிரிட்டன் இராணுவம் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர் பஸ்ரா மாகாண ஆளும்சபையின் இணைப்பாளரான ஹசீம் அல் - அனாச்சி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் நேற்றுக்காலை தனது கடமைக்காக சென்றுகொண்டிருந்த வேளை, இராணுவ காவல் நிலையமொன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இவருடன் பயணஞ்செய்த இரண்டு ஈராக்கியர்களும் கொல்லப்பட்டனர்.

பஸ்ரா நகரம் பிரிட்டன் படையினின் முழுக்கட்டுப்பாட்டிலுள்ளது. கொல்லப்பட்ட அனாச்சி - பஸ்ரா நகரின் முன்னாள் பிரதி ஆளுனராக இருந்தவர்.

தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. ஆனால், தாக்குதல் நடத்தியவர்கள் பொலிஸ் சீருடையில் இருந்ததாக பஸ்ரா மாகாண ஆளும்சபை அதிகாரிகள் றொட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

ஈராக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தை கடந்தமாதம் 28ஆம் திகதி அமெரிக்கா கையளித்தபின் ஈராக்கில் கொல்லப்பட்ட இரண்டாவது உயரதிகாரி இவராவார்.

கடந்த வாரம் ஈராக்கின் வடக்கு நகரான மொசூலின் ஆளுனர் உசாமாகஷ்முலா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கார்க் குண்டுவெடிப்பில் ஈராக்கின் நீதியமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பியதுடன், அவரது மெய்ப்பாதுகாவலர்கள் ஐவர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் காஸாவில் ஏவுகணைத் தாக்குதல்

இஸ்ரேல் ஹெலிகொப்ர்கள் காஸா நகருக்கு அருகிலுள்ள அகதிமுகாம் மீது நேற்றுமுன்தினம் ஏவுகணைத்தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவத்தனர். இந்தத் தாக்குதலில் குறைந்தது ஐந்து பொதுமக்கள காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனத்தின் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஆயுதக் குழு தங்கியிருந்த வீட்டின் மீதே ஏவுகணைத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத்தாக்குதல் தொடர்பாக, இஸ்ரேலிய இராணுவம் கருத்தெதனையும் தெரிவிக்கவில்லை. பாலஸ்தீனத்தின ஜனாதிபதி யாசீர் அரபாத் மற்றும் பிரதமர் அகமட் கூரேக்கும் இடையில் உள்முரண்பாடு நிலவிவந்த வேளையிலேயே இஸ்ரேல் இத்தாக்குதலை நடத்தியுள்ளது.




மற்றொரு சம்பவத்தில் மேற்குக் கரையான நப்லஸில் இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 17 வயதான பலஸ்தீன இளைஞன் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டான். இந்த இளைஞன் துப்பாக்கியொன்றை வைத்திருந்ததன் காரணத்தினாலேயே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது

ஆனால், குறித்த இளைஞன் இஸ்ரேலியப்படையினர் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்திய வேளையிலேயே இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, துல்கரம் நகருக்கு அருகிலுள்ள சீடாப் பகுதியில் இஸ்ரேலிய படையினர் நடத்திய மற்றொரு தாக்குதலில், இரண்டு பலஸ்தீன ஆயுததாரிகள் கொல்லப்பட்டதுடன் இஸ்ரேல் படையினர் ஒருவரும் படுகாயங்களுக்குள்ளானார்.

### ஹீத்ரோ விமான நிலையம் மீது நடத்த

## திட்டமிட்டிருந்த தாக்குதல் குறித்த ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாம்!



லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் மீது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட இருந்த தாக்குதல் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் காணாமற்போனமை தொடர்பாக, ஸ்கொட்லாண்ட் யாட் பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

ஹீத்ரோ விமான நிலையம் மீது தீவிரவாதிகளால் நடத்தப்படவிருந்த தாக்குதல் நிலைகள் தொடர்பான அறிக்கை, ஸ்கொட்லாண்ட் யாட் பொலிஸாரிடம் இருந்ததாக பிரித்தானியப் பத்திரிகையொன்று செய்தி தெரிவித்துள்ளது.

கடந்த யூன் மாதம் 26 ஆம் திகதியிடப்பட்ட இந்த ஆவணங்களின் கோப்பில் தாக்குதல் நடத்துவதற்கான நிலைகள், தாக்குதல் நடத்தும் படையணிகள் பின்வாங்க வேண்டிய பாதைகள், ஸ்கொட்லான்ட் யாட் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை நேரங்கள் தாக்குதல் ஆயுதங்களின் விபரங்கள் ஆகியன காணப்பட்டதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இந்தக் கோப்பில் இத்தகைய ஆவணங்கள் இருந்துள்ளமையை உண்மையென பி.பி.ஸியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ஸ்கொட்லான்ட் யாட் பொலிஸாரின் பேச்சாளர் -குறிப்பிட்ட கோப்பில் மேற்படி விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பது பற்றி இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை என்றும், குறிப்பிட்ட ஆவணங்கள் காணாமற்போனமை தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விசாரணை தொடர்பான விபரங்களை பாதுகாப்புக் காரணங்களால் தற்பொழுது வெளியிடமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஹீத்ரோ விமான நிலையம் மீது தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்த உள்ளதாக பிரித்தானியப் புலனாய்வுத்துறையினர் எச்சரித்ததை தொடர்ந்து, ஹீத்ரோ விமான நிலையப் பாதுகாப்பை கடந்த வருடம் முதல் பிரித்தானிய இராணுவத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிக்குட்டியுடன் நாடாளுமன்ற பிரதிநிதி

அமெரிக்காவில் வன விலங்குகளை பாதுகாக்க புதிய சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். புலி, சிங்கம், மற்றும் அபூர்வ வகை விலங்குகள் அழியும் நிலை ஏற்பட்டு இருப்பதே இந்தப் புதிய சட்டம் கொண்டு வந்ததற்கு காரணம்.



இந்த சட்டம் கொண்டு வந்த பிறகு அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் எட்வர்ட் ராய்ஸ், டாம் உடல், இளெஷால் ஆகியோர் வொஷிங்டன் நகரில் கேபிடால் ஹில் பகுதியில் உள்ள விலங்குகள் பாதுகாப்பு இல்லத்துக்கு சென்றனர். அங்குள்ள ஒரு புலிக்குட்டியை அவர்கள் தூக்கி வைத்து கொஞ்சினார்கள். அந்தப் புலிக்குட்டி அவர்களது கையை நாவால் நக்கும் காட்சி.

## பூமிக்கடியில் 17 ஆண்டுகள்



அமெரிக்காவில் சிகாடா ககையை சேர்ந்த ஒரு வகை பூச்சி காணப்படுகிறது. இந்த வகை பூச்சி பூமிக்கு அடியில் தாவரங்களின் வேர்கள் மற்றும் கழிவுகளை உண்டு வாழக்கூடியது. 17 ஆண்டுகளுக்கு பிறகுதான் இந்த பூச்சிகள் பூமியை துளைத்துக்கொண்டு வெளியே வரும்.

ஆண், பெண் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்து விட்டு மடிந்து விடும். அவைகள் இட்ட முட்டை நிலத்தில் கிடக்கும். மழை பெய்ததும் அவை புழுவாக மாறி பூமிக்குள் சென்றுவிடும். 17 ஆண்டுகளுக்கு பிறகு அவை பூமியை துளைத்துகொண்டு வெளியே வந்துவிடும் தன்மை கொண்டது.

கமநடா 2 மாதங்களுக்கு முன்பு சிகாடா பூச்சிகள் பூமியை விட்டு வெளியே வந்தன. அவை இனப்பெருக்கம் செய்து விட்டு இறந்துவிட்டன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு; இந்திய நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## அப்துல் கலாம் தெரிவித்தாராம்

(கொழும்பு)

இலங்கையின் பிரதேச ஒருமைப் பாடு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் ஒருபோதும் மாற்றம் ஏற்படாது என இந்திய ஜனாதிபதி பேராசிரியர் அப்துல் கலாம் தெரி வித்ததாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வின் அலுவலகம் வெளியிட்ட செய் திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும்,

இலங்கையின் வடக்கு - கிழக் குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நடத்தப்படும் பேச்சுவார்த் தைகள் இனப்பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான இறுதித்தீர்விற்கான அம்சமாக இருக்க வேண்டும் என வும் இந்திய ஜனாதிபதி தெரிவித்தா.

இதேவேளை - இந்திய சிறைச் சாலைகளில் உள்ள இந்திய மீன வர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் செயற்பட ஜனாதி பதி அப்துல் கலாம் இணக்கம் தெரி வித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையை அடுத்து உரிய அதிகாரிகளுக்கு இது தொடர் பான ஆலோசனைகளை இந்திய ஜனாதிபதி வழங்கியதாகவும் பிரத மர் அலுவலக அறிக்கை தெரிவித் துள்ளது.




கிளிநொச்சி வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களை படத்தில் காணலாம்.

# "விடுதலைப் புலிகள்" ஏடு இன்று வெளிவருகிறது

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் 117 வது இதழ் இன்று வெளிவருகிறது.

கேள்விக்குறியாகியுள்ள சமாதா னத்தின் எதிர்காலம்? என்ற முகப்புச் செய்தியுடன் வெளிவரும் இந்த ஏடு விடுதலைப் புலிகளின் ஆனி - ஆடி மாதத்துக்குரிய 117 ஆவது இதழா கும்.

ஆபத்தான ஆலோசனை என்ற ஆசிரியர் தலையங்கத்துடன் வெளி வரும் இந்த ஏட்டில் 'அரசியல் வணி கத்தின் காட்சியறைக் கோலங்கள்' என்ற தலைப்பில் கா.வே.பாலகுமா ரன் எழுதிய அரசியல் கட்டுரையும், 'காலம் அணைக்கக் காத்திருக்கும் கொங்கோ மக்கள்' என்ற தலைப் பில் அருளாளன் எழுதிய கட்டுரை யும், 'படித்த பாடத்தை மீண்டும் படிக் கும் முயற்சி' என்ற தலைப்பிலான எல்லாளனின் கட்டுரையும், இவற் றோடு கரும்புலி மேஜர் தனுசனின் நினைவான 'தேசத்தின் புயல்' என்ற தலைப்பிலான கட்டுரைகளோடு,

'பிளவுபட்ட இலங்கையை ஒட்ட வல்லவர் யார்', "தற்கொடைத் தாக் குதல்களும் கரும்புலிகளும்" ஆகிய தலைப்புக்களுடனான கட்டுரைக ளோடு, அன்புச்சோலை மூதாளர் பேணலகம் பற்றிய, "எங்கள் பிள் ளைகள் தேசத்தைக் காத்தார்கள் தேசம் இப்ப எங்களைக் காக்கிறது" என்ற கட்டுரையும், 'பூக்களுள் எழுந்த புயல்' என்ற தலைப்பிலும், 'நிதியுத விகள் ஏய்க்கும் சிறிலங்கா - ஏமா றும் சர்வதேச சமூகம்' என்ற தலைப் பிலான கட்டுரைகளோடு, வியாச னின் 'ஆடிக்காற்றுக்கு அணையாத விளக்கு சித்திரைக்காற்றுக்கு ஜீவ னிழக்கும்' என்ற தலைப்பிலான கவிதையும், 'மாமனதை யாரறிவார்' என்ற செந்தோழனின் கவிதையை யும் தாங்கியவாறு இந்த இதழ் வெளிவருகிறது.

## அமைச்சின் மேலதிகசெயலாளர் லஞ்ச ஆணைக்குழுவால் கைது

(கொழும்பு)

அமைச்சு ஒன்றின் மேலதிக செயலாளர் நேற்று லஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு வினால் கைது செய்யப்பட்டார்.

இவர் 21 இலட்சம் ரூபாய் சம் பாதித்தது தொடர்பாக சரியான தக வல்களை சமர்ப்பிக்காததை அடுத்து இவரைக் கைதுசெய்ததாக ஆணைக் குழுவின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஏறாவூரில்...

சைக்கிளில் சென்ற - முகமூடி அணிந்த இனந்தெரியாத இளைஞர் களே நிலத்தில் குப்புறப்படுக்குமாறு கூறிவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கால்களில் பலத்த காயம டைந்த இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர் என தெரிய வருகிறது.

### கருணாவுக்கு...

கிழக்குப் பிராந்தியத்தில் மோத லும், உயிரிழப்புக்களும் ஏற்படு வதைத் தடுக்கவே கருணா வெளி யேற தான் உதவியதாக அலிசாஹிர் மௌலானா இத்துண்டுப் பிரசுரத் தில் தெரிவித்துள்ளார்.

மனச்சாட்சிக்கு சரியென்றுபட் டதை துணிவுடன் செய்ததாகவும் இதன்மூலம் பொதுமக்களும் கட்சி யும் பாதிப்படையக்கூடாது என்பதற்கா கவே தனது நாடாளுமன்ற உறுப்பி னர் பதவியிலிருந்து விலகியதா கவும் அலிசாஹிர் மௌலானா குறிப் பிட்டுள்ளார்

### கஜேந்திரனின்...

கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங் கள் குறித்து விவாதித்தனர்.

இதன்போது தமிழ்மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி எவரும் கதைக்காததையடுத்து, கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் - தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி யும், ஊடகவியலாளர்கள் கொல்லப் பட்டது பற்றியும் கூறி,

தமிழ்மக்கள் தொடர்ந்து ஏமாற் றப்பட்டு, போர் திணிக்கப்பட்டால், தமிழர் தாயகப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிங்களப் படையினர் சடலங்களாக சவப்பெட்டிகளில் திரும் புவர் என்று கூறினார்.

இதனையடுத்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற அவைமையத்துக்கு வந்து கூச்சலிட்டு கஜேந்திரனை மிரட்டும் பாணியில் நடந்துகொண்டனர்.

அவ்வேளையில், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவி ராஜ் எழுந்து - ஐக்கிய இலங்கைக் குள்ளேயே தீர்வினை எட்டுவதற்கே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து

### விகாரைமீது...

தல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலுடன் தொடர் புடைய சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக வும் - சம்பவத்துக்கான பின்னணி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மத்திய முகாம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (01)

### அரசின் நிலைப்பாட்டை...

குறித்த கோரிக்கை ஏற்றுக்கொள் ளப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் உறுப்பினர்கள் பலர் தெரி வித்தாலும், ஆளும் அரசில் முக் கிய அங்கம் வகிக்கும் ஜே.வி.பி இவ்விடயத்தில் தொடர்ந்தும் எதிர்ப் பைத் தெரிவித்துவருவதாகவும் - ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

## அரசியல் பணிக்கு வந்த புலிப் போராளிகள் முகமாலையில் தடுப்பு!

(கிளிநொச்சி)

அரசியல் பணிக்காக யாழ்ப் பாணம் வந்த விடுதலைப் புலிப் போராளிகள் முகமாலைச் சோத னைச்சாவடியில் தடுத்துவைக்கப் பட்டு, கடும் சோதனைக்கு உட்படுத் தப்பட்டனர்.

நேற்றுமாலை வன்னியிலிருந்து விடுதலைப் புலிப் போராளிகள் யாழ்ப் பாணம் வந்துகொண்டிருந்தவேளை, முகமாலைச் சோதனைச் சாவடியில் படையினர் தடுத்து நிறுத்தினர்.

இவர்கள் கொண்டுவந்த இரு டொல்பின் மற்றும் மினிபஸ் என்பன படையினரால் துருவித்துருவி சோத னையிடப்பட்டது. இவற்றுடன் இருந்த மேலதிக சில்லுகள் காற்றுத் திறக் கப்பட்டு சோதனையிடப்பட்டது.

சுமார் ஒன்றரை மணிவரை தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இவர்கள் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப் பட்டனர்.

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு ஒகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்!

கடந்த மே மாதம் ஆரம்பமாகி நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகளை எதிர்வரும் ஒகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித் தன.

ஒகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன் னர் பரீட்சை முடிவுகளை வெளியிடு வதற்காக - முடிவுகளை இறுதிசெய் யும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

கடந்தமுறை 50 ஆயிரம் பரீட் சார்த்திகள் மீளாய்வுக்கு விண்ணப் பித்திருந்தனர். மீளாய்வு விண்ணப் பங்கள் 15 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக அதிகரித்ததால், இம்முறை பரீட்சை புள்ளியிடல் நடவடிக்கை களில் கூடிய கவனம் செலுத்தப்படு வதாகவும் அந்த வட்டாரங்கள் தெரி வித்தன.

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பி நீங்கள் நாட வேண்டிய

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாகவும் - சம்பவத்துக்கான பின்னணி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மத்திய முகாம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

ளப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் பலர் தெரிவித்தாலும், ஆளும் அரசில் முக்கிய அங்கம் வகிக்கும் ஜே.வி.பி இவ்விடயத்தில் தொடர்ந்தும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதாகவும் - ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

மன்ற அவைமையத்துக்கு வந்து கூச்சலிட்டு கஜேந்திரனை மிரட்டும் பாணியில் நடந்துகொண்டனர்.

அவ்வேளையில், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் எழுந்து - ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தீர்வினை எட்டுவதற்கே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து, ஜாதிக ஹெலஉறுமய - அரசுக்கு ஆதரவு வழங்கப்போவதாக எச்சரிக்கை செய்தது.

இதேவேளை - ஆளும் கட்சியின் கடும் எதிர்ப்பை அடுத்து - கஜேந்திரனின் உரையை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்க சபாநாயகர் உத்தரவிட்டார்.

FedEx Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச.முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

# சமாதானப் பேச்சுக்களில்...

வொருவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில்இந்தியா கட்டாயம் பங்கு வகிக்கவேண்டும் எனக்கூறுகின்றனர்.

விடுதலைப்புலிகளும் இந்தியாவோடு தமது சொந்த இடத்தில் வைத்துப்பேசவேண்டும் எனக்கூறுகின்றார்கள்.

கருணாவின் விடயம் தொடர்பாக பிரதமர் தெரிவிக்கையில் நாங்கள் கருணாவுக்கு எந்தவிதத்திலும் பாதுகாப்புக் கொடுக்கவில்லை இது விடுதலைப் புலிகளுடைய உள்வீட்டுப் பிரச்சினை. இதில் நாம் தலையிடுவதற்கு ஒன்றுமே இல்லை.

சமாதான முயற்சிகள் தொடர்பாக நாம் விடுதலைப் புலிகளுடன் சரியான பாதையிலேயே கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றோம்.

நாம் இதுதொடர்பாக ஏற்கனவே தெரிவித்துவிட்டோம். நாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். தற்போது சமாதான முயற்சி தொடர்ந்த வண்ணமே உள்ளது. பேச்சுவார்த்தை மட்டுமே மீள ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்து மீளவும சண்டை வருவதற்கான சார்த்தியங்கள் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் இது ஒரு ஆதாரமற்ற கூற்றாகும். போரை ஒருவரும் விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். எமக்குச் சமாதானமே தேவை எனவும் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.